1284

Regd. No. M. 2797. போட்டிப் பரிசு—பக்கம் 10. (விலை அணு ஒன்று)



VARTHAGA OOLIAN.

மலர் 1.] திருச்சிருப்பள்ளி ஏப்ரல்-மீ 1933 [இதழ் 10

Trichinopoly ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு: April 1933

"வர்த்தக ஊழியன் வருட சந்தா.

உள்நாட்டிற்கு ரூ. 1. வெளிநாட்டிற்கு ரூ. 1—8—0

விளம்பர விகிதம்.

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.

முன்பணமில்லாத விளம்பரங்கள்

பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

அட்டவணை

திருவாரூர் வர்த்தக மகாநாடு ....
வர்த்தக ஊழியனைப்பற்றி அபிப்பிராயங்கள் 7
வியாபாரத் துணுக்குகள் ....
நாணயமாற்றம், கப்பற் செய்தி, போட்டிப்பரிசு 10
ரயில்வே ரேட் 11
நெசவு தொழிலுக்கு பாதுகாப்பு 12
சிறுமணித்திரள் 13
Trade in Mysore 14
மதிப்புரை 14
ராஜம் (கதை) 15
ஷராப் வர்த்தகம் 18
Gold Standard 21
பட்டுத் தொழில் 24

"VARTHAGA OOLIAN"
Annual Subscription.
Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.
Advertisement Tariff.
One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0
Per Insertion.
Advertisement without prepayment will not be considered. For further particulars write to the manager.

THE REGISTRAR ... 13 JUN 1933 ... MADRAS

SRI NILAYAM PRESS. ARTISTIC COLOUR PRINTERS, BIG BAZAAR, TRICHINOPOLY.

Buy Indian! **Buy Indian!!**

ஸ்வதேசி ஸம்மர்மேட்டி

பனியன்கள்

வீநெக் முதலிய வகைகளும், ரெடிமேட் டிவில் ஷர்ட்டுகள், ஆப் ஆர்ம்ஸ்கள், அண்டர் வேர்கள் எல்லாம் மலிவாய்க் கிடைக்கும். சுத்த சுதேசி.

வியாபார ரேட்டு விபரத்துக்கு எழுதவும்.

ஜானகிராம் ஸ்வதேசி ஸ்டோர்ஸ்,

(காங்கிரஸ் அத்தாக்ஷி பத்திரம் உடையது)

சைனபஜார், தெப்பக்குளம் P. O. திருச்சி.

S. RETHINAVELU CHETTY,

SHROFF MERCHANT,

BIG BAZAAR STREET, TRICHINOPOLY,

All kinds of Jewels set with No. 1 Indian Chemical Diamond, the best in the Market, can be Supplied at cheap rates.

சி. ரெத்தினவேலுசெட்டி

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி திருச்சி.

நெ. 1 இந்தியன் கெமிகல் டைமண்டு

குணத்தில் சிறந்தது. விலையில் குறைந்தது. கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு எமது மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது. நெ. 1 இந்தியன் கெமிக்கல் டைமண்டு கற்கள் உறுதியிலும் பிரகாசத்திலும் அசல் வைரங்களுக்கு ஒப்பாக விளங்குகின்றன. ஒரு முறை வரவழைத்துப்பார்த்தால் உண்மை விளங்கும். 1நெ. இந்தியன் கெமிகல் டைமண்டு கற்களைக்கொண்டு பவுனில் கட்டப்பட்ட பலவிதமான நகைகளும் அசல் 1நெ. ரங்கூன் புது வைரங்கள் இமிடேஷன் புஷ்பராகம் தளுக்கு படிக்கம் இமிடேஷன் பட்டை சிகப்பு, பூருகுச்சை பிளேன் பட்டை சிகப்பு, நீலம் திரிகலர், பச்சை முதலிய கற்களும் வர்ணத்தகடுகள் முதலியவைகளும் சரக்கு சுத்தமாயும் விலை சரசமாயும் எம்மிடம் கிடைக்கும்.

மேற்கூறிய தினுசுகளில் 2-ம் நெ. கற்களும் கைவசமிருக்கின்றன.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும் விலை விபரங்களுக்கு எழுதுக.

இனாம்! இனாம்!!

என் அனுபவசாஸ்திரீய

தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.

இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்ருக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையது மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிருனே அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணு இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: எம். வி. கிருஷ்ணராவ்,

உதகமண்டலம், (நீலகிரி.)

BRILLIANT RANGOON KAMALAM.

Can be had in retail also at moderate prices.

13 JUN 1933



Our Brilliant Rangoon Kamalam polished with diamond dust, manufactured in our Diamond Cutting Factory, under the Expert supervision of highly qualified and well experienced hands, in electric current machines.

A trial is solicited.

From :— **T. B. Govindararajaloo Naidu,**

Burma Chemical Works & Jeweller, 142, Mogul Street, RANGOON.

எனது புதிய தொழிற்சாலையில், கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு எனது மேற்பார்வையில் தயார் செய்யப்படும் ரெங்கூன் **கமலங்கள்** எலக்டிரிக் சக்கர சாணையில் வைர வடியைக்கொண்டு மெருகு தீட்டி அசல் வைரங்களுக்கு ஒப்பான பிரகாச பூரிப்புடன், சுத்தமாக பட்டை தீர்த்து குறைந்த விலைக்கு இந்தியாவில் எல்லா பாகங்களுக்கும் ஏராளமாக அனுப்பப்பட்டு வருகின்றன.

எனது வர்த்தகம் எல்லா ஊர்களிலும் விருத்தியாகி, வியாபாரிகள் தக்க லாப அடையும்பொருட்டு, எங்கள் ஊர் நிலவரத்திற்கும் சரசமாய் சரக்குகள் மொத்தமாயும் சில்லரையாகவும் அனுப்பி வருகின்றேன்.

ஷை ரெங்கூன் கமலங்களில், பவுனினால் கட்டப்பட்ட பலவித நகைகளும், இமிட்டேஷன், பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, பிளேயின் பட்டை, நீலம் திரிகளர், பச்சை, தளுக்கு படிக்கம், படிக்கம், முதலிய கற்களும், தங்கம், வெள்ளி வர்ணத்தகடுகளும், கைவசம் தயாராய் இருக்கின்றன.

தாங்கள் இதுவரையில் எங்களூர் வியாபாரிகளிடம், ஏராளமான சரக்குகள் தருவித்திருந்த போதிலும், ஒரு தடவை ஸ்பெஷலாக எனது ரெங்கூன் கமலங்களுக்கும், நகைகளுக்கும் ஒருமுறை ஆர்டர் கொடுத்து வரவழைத்துப் பார்த்தால் எனது சரக்குகளின் உயர்வும், விலை சகாயமும் நன்கு தெரியும்.

தங்கள் தேவைக்கு இன்றே ஆர்டர் எழுதுங்கள்.

T. B. கோவிந்தராஜுலு நாயுடு,

பர்மா கெமிகல் ஒர்க்ஸ் & நகை வியாபாரம்,

142, மொகல் ரோடு, ரேங்கூன்.

தங்கள் வியாபாரத்திற்குள்ள டிரேட் மார்க்குகள், பெயர்கள், லேபில்கள் முதலியவைகளை மற்ற வியாபாரிகள் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையுமுன் நீங்கள் அவைகளை உடனே

கல்கத்தா ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும்.

விலாசம்;—ஆல் இந்தியா ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி,
முழு விபரம் இனும். ஹீபர் ரோட், பாலக்கரை, திருச்சினுப்பள்ளி.

உலகம் முழுவதும் நடைபெற்ற பருத்தி வியாபாரத்தில் ஜனவரி மாதத்துடன் முடிவான அரை வருடத்தில், 1932-ளு ஜனவரி மாதத்துடன் முடிவான அரை வருடத்தைவிட 3,57,000 பேல்கள் அதிகமாக செலவாகி யிருக்கிறதென்றும் சமீபத்தில் எடுத்த கணக்கிலிருந்து தெரிகிறது.

வெள்ளை வெட்டைக்கு ஆச்சர்யமானது

(குணமில்லை என்ருல் ரூ. 100 இனும்)

வங்க வெள்ளி பஸ்பம்

10 வருடமாகியும் தீராத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல். புண், ரத்தம் விழல், நாபி ரணம், வயிற்றுப்புண், சீழ்வெள்ளை, மஞ்சள்வெள்ளை, ஒழுக்குவெள்ளை, மூலக்கடுப்பு, ஆசனக்கடுப்பு, வயிற்றுவலி, தந்திமேகம், சதை அடைப்பு, கல்லடைப்பு, ஈஎறும்பு மொய்த்தல், நீர்சுருக்கு, இந்திரிய ஸ்கலிதம், நீற்றுப்போதல் முதலிய சகல வெள்ளை வெட்டையும் கண்டிப்பாய் குணமாகும். இது இந்த வியாதிக்கே ராஜன்.

இதற்கு மேலான மருந்தே இல்லை 1 புட்டி ரூ. 15. ½ புட்டி ரூ. 8.

குறிப்பு: அன்னிய நாட்டினர் தபால் செலவு ரூ. 2 சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

விலாசம் :— **கே. எஸ். பதி, வைத்தியசாலை, பழனி** S. I. Ry

T. R. RANGASAWMY NAIDU,

PAINT & GLASS MERCHANT,

341 & 342, Big Bazaar Street, TRICHINOPOLY.

All sorts of Paints, Varnishes, Colours, Enamels, etc., manufactured by well known firms & British and other make

Looking glasses, ceiling glasses, Colour glasses and ornamental glass etc.

Raja Ravi Varma pictures, British & German lady pictures, sceneries, Postcard pictures, frames, Tin Plates etc.

Straw boards, Colour papers, Glass beads, Gold & Silver leaves, Copper foils, etc., for ornamenting Pandals.

Can be had at cheap rates.

அழகுக்கு அழகு செய்வன ஆபரணங்களே!

அதிலும்

ரெங்கூன் சையாசின்ட் அவர்களால் தயாரிக்கப்படும் எலெக்ட்ரோ டைமண்ட்ஸ்களை

— கொண்டு தயாரிக்கப்பட்ட —

ஆபரணங்களே மிகச்சிறந்தவை

ஆதலால்

இன்று முதல் நீங்கள் அணியும் சகல நகைகளிலும் சையாசின்ட் அவர்களால்



தயாரிக்கப்பட்ட எலெக்ட்ரோ டைமண்ட்களையே வைத்து அணியுங்கள்.

மேற்படி எலெக்ட்ரோ டைமண்ட்ஸ் என்னும் ரேங்கூன் கமலங்களை இவ்விடம் ரெங்கூன் நிலவரப்படிக்கே விற்பனை செய்வதற்கு நாங்கள் (**Sole Agent**) விற்பனை ஏஜண்டாக 30—3—33உ முதல் நியமிக்கப்பட்டு ஏராளமான கமலங்கள் கைவசம் வைத்திருக்கின்றோம்.

நாங்கள் வியாபாரிகளுக்கு ரெங்கூன் நிலவரப்படிக்கே திருச்சியில் தருகின்றோம். அல்லது ரெங்கூன் நிலவரப்படிக்கே வி. பி. பார்சல் மூலம் அனுப்புகின்றோம்.

விபரங்களுக்கும் தேவைக்கும் இன்றே எழுதுங்கள்.

இதுவும் அன்னியில் எங்களிடம் ரேடியோ டைமண்டு (**Regd**) பெல்ஜியம் கெமிகல் டைமெண்டு, செயற்கை புஷ்பராகம், இமிடேஷன் புஷ்பராகம், பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, நீலம், பச்சை, தளுக்குபடிகம் முதலிய கற்களும், இதற்கு வேண்டிய தங்க வர்ண தகடு, வெள்ளிதகடு, முதலிபவைகளும், கம்மல், தோடு, கடுக்கன், மாட்டீல், ஜடைபில்லை, குச்சுபொட்டு, பேசரி, மூக்குத்தி முதலிய சகல நகைகளும் கிடைக்கும்.

எமது விலாசம்:—

மோதி. ஸ்ரீராமலு செட்டி,

ஷராப்பு வர்த்தகம், (ஸ்ரீ ராம விலாஸ் பில்டிங்)

திருச்சினப்பள்ளி.

(ஸோல் ஏஜண்ட் ரங்கூன் சையா சிண்ட்ஸ் எலக்ட்ரோ டைமண்ட்ஸ்.)

MOTHI SRIRAMULU CHETTY,

Shroff Merchant, (Sri Rama Vilas Building)

TRICHINOPOLY.

SOLE AGENT FOR RANGOON .... SAYA SINT'S ELECTRO DIAMONDS.

You all know that Mr. Saya Sint's Electro diamonds are the first and foremost in Rangoon & they stand alone.

As they are prepared in diamond cutting machines in electric current and polished with diamond dust by expert workmen, all the qualities of real diamonds are exquisitely manifested in these Electro diamonds as well.

Now as we have been appointed sole agent for the above Electro diamonds from 30—3—33 we are authorised to sell these diamonds **for the same price as Mr. Saya Sint sells at Rangoon.**

Besides these we have got a fresh stock of best genuine (real) pushyaragams, scientific pushyaragams, imitation pushyaragams, Vycranthams, imitation rose chakrasana cut rubies, Kuchai plain rubies and all kinds of jewels set with above precious stones.

Our prices are considerably low when compared with others.

A trial order is earnestly solicited.

13 JUN 1933

திருவாரூர் வர்த்தக மகாநாடு.

திருவாரூரில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் வர்த்தகர் மகாநாட்டில் தலைமை வகித்த கோவை பிரபல பஞ்சு வியாபாரியும், மில்களின் ஏஜண்டுமான திரு. வி. எஸ். செங்கோட்டய்ய முதலியார் செய்த பிரசங்கம் பின்வருமாறு:—

திவ்ய க்ஷேத்திரமான திருவாரூரில் நடைபெறுகிற நமது மரபினர் வர்த்தகர் மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி என்னை அழைத்த உபசரணைக் கமிட்டியாருக்கும் மற்று முள்ளவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இவ்வித மகாநாட்டில் தலைமை வகிக்கக்கூடிய அனுபவமுள்ள கனவான்கள் நம் மரபில் அனேகர் இருந்தும் எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி பாராட்டுகிறேன். இப்பதவியை நான் ஏற்றுக்கொண்டகாரணம் நான் இதற்கு முற்றிலும் அருகதையுடையவன் என்பதால் அல்ல. தமிழ் உலகின் பற்பல ஊர்களிலிருந்து இவ்விடம் விஜயம் செய்திருக்கும் பெரியார்களை தரிசித்து அவர்களுடன் அளவளாவும் பாக்கியத்தை அடைய வேண்டும் என்கிற அவா மிகுதியினாலேயே இப்பதவியை ஏற்றுக்கொண்டேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம் மகா நாட்டின் நடவடிக்கைகள் இனிது முடிய இவ்விடம் கூடியிருக்கும் எல்லோரும் எனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது நோக்கம்.

நமது மரபினர்கள் வர்த்தகத்துறையில் அபிவிருத்தி அடைவதற்கு ஏற்ற மார்க்கங்கள் எவை, நமது சமூகத்தைச்சேர்ந்த வியாபாரிகளுக்கு கிடைக்கக்கூடிய லாபம் நம்மில் ஒரு சிலருக்கு மட்டும் பயன்படுவதல்லாமல் நம்மைச் சேர்ந்த ஏழைச் சகோதரர்களுக்கும் பயன் படும்படி செய்வதற்கு என்ன உபாயங்கள் தேவை என்பன போன்ற விஷயங்களைத் தீர்க்கமாக ஆலோசித்து, அதை ஒட்டிய தீர்மானங்களை தக்கபடி அமுலுக்கு கொண்டுவரும் வகையில் எப்படி நமது சங்கத்தை பலப்படுத்தலாம் என்பதுதான் இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டுமென்பது எனது கோரிக்கை. இது விஷயமாகச் சபையோர்களுடைய அபிப்பிராயங்களைத் தாராளமாய் வெளியிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சிறப்புடன் வாழ்ந்த நமது முன்னோர்களும் நம் நாட்டு வியாபார சிகாமணிகளும் நமது தேச பக்தர்களும் நமக்கு வழிகாட்டிகளாய் இருக்கிறார்கள். நாம் ஏற்றுக் கொண்ட கைங்கரியம் திருப்திகரமான முறையில் பூர்த்தி அடைய மேற்கூறியவர்களின் உன்னதமான லக்ஷியங்களை மனதிலிருத்தி, நம்மால் கூடியவரை அவர்கள் வழியைப் பின்பற்ற முயல வேண்டும்.

வர்த்தக இந்தியா

சத்தியமே நித்தியம் என்பது எக்காலத்தும் எல்லா நாட்டினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தோருண்மை. சத்திய காமன் உண்மையைப் பேசியதினால் பிரம்ம ஞானத்தை அடைவதற்கு அருகதை யுடையவனென மதித்து மகரிஷி ஒருவர் அவரைத் தம் சீடராய் ஏற்றுக்கொண்ட மாண்பைப் பற்றி உப நிடதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். "தங்கள் ராஜ்யத்தில் வர்த்தகம் நடத்துபவர்கள் சத்தியவான்களாயிருக்கிறார்களா?" என்று நாரதர் தர்மராஜனைக் கேட்டாராம். "நூலும் தறிகளும் கொடுத்து உதவுவதோடு நெசவுக்காரர்களுடைய குடும்பத்தாருக்கு நாலைந்து மாதங்களுக்கு போதுமான உணவுப்பொருள்களும் கொடுத்து உதவிவருகிறீர்களா? இதுபோல இதர தொழிலாளர்களையும் அரசாங்கம் காப்பாற்றி வருகிறதா" என்கிற கேள்விகளையும் நாரதர் கேட்டதாக மஹாபாரதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பூர்வ இந்தியாவிலே வர்த்தகர்களையும் தொழிலாளர்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தாரின் கடமையாக இருந்ததென்பது இதனால் விளங்குகிறதல்லவா? இவ்வித சௌகரியங்கள் நம் முன்னோர்களுக்கு ஏற்பட்டிருந்ததால்தான், தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் நெசவுத் தொழிலைக் கைக்கொள்ளவும், அழியாப் புகழ்பெற்ற திருக்குறளை உலகத்திற்கு கொடுத்துதவும் சாத்தியமாய் இருந்தது. இது ஒரு தனிப்பட்ட உதாரணம் அல்ல. பழைய தமிழ் நூல்களை இயற்றிப் பெயர்பெற்ற ஆசிரியர்கள் இது போலவே வர்த்தகத்தில் அமர்ந்திருந்ததாய் ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் வர்த்தகத்தில் கவனத்தைச் செலுத்துவதும் கலைகள் வளர்ச்சியில் நேரத்தை செலவிடுவதும் ஒன்றுக்கொன்று, முரண்பட்ட காரியங்கள் அல்ல என்பது இந்த சம்பவங்களிலிருந்து நன்றாய் விளங்குகின்றது. இக்காலத்திய வர்த்தகர்களுக்கு இது ஒரு சிறந்த படிப்பினையாகும்.

இந்துக்களுக்குப் பொதுவாகக் கடவுள், மோக்ஷம், மறு ஜன்மம் ஆகிய விஷயங்களில்தான் மனம் நாடுகின்றது. இல்லறவாழ்க்கைக்கு தேவையான அம்சங்களில் விசேஷகவனம் செலுத்துகிறதில்லை என்று ஒரு சார்பார் நினைப்பது ஆதாரமற்ற அபிப்பிராயம் என்பதைச் சரித்திரக்காரர்கள் தற்காலத்தில் எடுத்துக்காட்டுகிறார்கள். இகபர சுகங்களை ஒன்றாய் பாவித்துக் குடும்பவாழ்க்கையை நமது முன்னோர்கள் நடத்தினார்கள் என்பதற்கு,

"அருளில்லார்க்
கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா
கியாங்கு"

என்கிற திருக்குறளே தக்க சான்றாகும். "திரை கடலோடியும் திரவியந்தேடு" என்பது ஔவைப் பிராட்டியின் முதுமொழி. பொருள் சேகரிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் அவசியமில்லையென்பது இதன் கருத்து அல்ல. உண்பதும், உடுத்துவதும், சுகப்படுவதும், மனித வாழ்க்கையின் முழுலக்ஷணங்களல்ல. தனத்தைச் சேகரித்த வரையில் அவரவர் குடும்பத்தினருக்கும் சுற்றத்தார்களுக்கும், ஏழைகளுக்கும் அதை உபயோகப்படுத்துவது தான் பெரிய மனிதர்கள் செய்யவேண்டிய சிறந்த சேவை. இவ்வழியைப் பின்பற்றும் பெரியோர்கள் எந்த சமூகத்தில் நிறையத் தோன்றுகிறார்களோ அந்த சமூகந்தான் உலகத்தின் மதிப்பிற்குரிய சமூகமாய் என்றும் விளங்கும் என்பதை யாவரும் ஞாபகத்திலிருத்தவேண்டும்.

பிற நாடுகள்

வியாபாரத் துரையில் விசேஷ அபிவிருத்தி அடைந்திருக்கும் அமெரிக்காவை ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டால், அந்த நாட்டில் அநேக கோடீஸ்வரர்களும், தர்மிஷ்டர்களும் இருப்பதாகத் தெரிகிறது, போர்டு என்கிற பெரியார் தமது மோட்டார் கம்பெனியின் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நவீன முறையில் தொழில் கற்றுக்கொடுப்பதுடன், அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தவர்களுக்கும் தேவையான கல்வி வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி ஆகிய இவைகளைத் தாராள சிந்தையுடன் ஏற்படுத்தி வருகிறார். இதுபோலவே ராக்பெல்லர் என்ற பெரியாரும் ஏழை மக்களுக்கு உதவக்கூடிய பற்பல வழிகளில்

தமது செல்வத்தை உபயோகித்து வருகிறார். உலகப்பிரசித்தி பெற்ற ராக்பெல்லர் சங்கத்தின் சுகாதார இலாகாவின் பிரதிநிதியாகச் சில தினங்களுக்கு முன் கன்னிபியர்ட் அவர்களும் அவர் சகோதரியும் கோயமுத்தூர் நகரத்தையும் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள இரண்டு மூன்று கிராமங்களைச்சேர்ந்த சிசு தர்ம சாலைகளையும் பார்வையிட்டார்கள். பொதுவாய் சுகாதாரத்தையும், குறிப்பிட்டு சிசு பரிபாலன வசதிகளையும் ஆதரிப்பதற்காக அமெரிக்காவுக்கு மட்டுமல்ல இந்தியா தேசம் உள்பட உலகெங்கும் ஒருங்கே பிரயோஜனம் அடையும்படி ராக்பெல்லர் சங்கத்தார் கோடிக்கணக்கான பவுன்களைச் செலவிட்டு வருகிறார்கள். இங்கிலாந்திலிருந்து இரண்டு உதாரணங்களை எடுத்துக்கொள்ளுவோம். கோக்கோ தூள் விற்பனை செய்யும் கேட்பரி கம்பெனியாரும், சோப் உற்பத்தி செய்யும் சன்லைட் கம்பெனியாரும் அவர்கள் லாபத்திலிருந்து அநேக ஆயிரம் பவுன்களை ஒதுக்கி வைத்து அவரது தொழிலாளர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செலவிட்டதால் நவீன வியாபார உலகத்தில் பேரும் புகழும் பெற்றிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் இது சமயத்தில் நான் குறிப்பிடவேண்டிய அவசியமென்ன? செல்வமென்பது அவரவர்களுக்கு மட்டுமல்லாமல் எழை மக்களுக்கும், பொது நன்மைகளுக்கும் பயன்படும்படி கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு சாதனம் என்னும் லோப புத்தி கொண்டு இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிடுவது மடமையாகும் என்பதை விளக்கும் பொருட்டேதான்.

தேச பக்தர்கள்.

நமது தேசத்தின் வர்த்தகம் விருத்தி அடைவதற்கு அரும்பாடு பட்டவர்களில் தலை சிறந்து விளங்குபவர் டாடா குடும்பத்தினர். இந்தியா முழுதுக்கும் முதன் முதலாக பஞ்சு இயந்திர சாலையை நாகப்பூரில் ஸ்தாபித்த பெருமை காலஞ்சென்ற சர். ஜெம்ஷட்ஜீ நசர்வான்ஜி டாடா என்கிற பெரியாரைச்சேர்ந்தது. மேற்குத்தொடர் மலையில் உள்ள பிரம்மாண்டமான நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தியை எடுத்துத் தந்திக் கம்பங்கள் மூலம் பம்பாய் நகரத்திற்கு கொண்டு போய் அவ்விடமுள்ள இயந்திர சாலைகளுக்கும், டிராம் வண்டிகளுக்கும், ரயில் வண்டிகளுக்கும் சரசமான விலைக்கு விற்று லாபமடைய முடியும் என்கிற மகத்தான எண்ணம் அப்பெரியார் மனதில் தோன்றி, அவர் குடும்பத்தாரின் இணையற்ற சக்தியால் அப்படியே சாதிக்க அக்காரியம் இன்றைக்கு சர்வ சாதாரணமானதொரு காரியமாய் நடைபெற்றுவருகிறது. அவரும்அவரது சத்புத்திரர்களும் வட இந்தியாவிலுள்ள ஒரு மலைப்பிரதேசத்தைநவீனநகரமாக்கி அவ்விடமுள்ள மகத்தான எஃகு சாலையிலிருந்து உற்பத்தியாகும் சாமான்களை இந்தியா முழுவதும் சரசமான விலைக்கு விற்கக்கூடியநிலைமையில்இருக்கிறார்கள். ஜெம்ஷட்பூர் அல்லது டாடா நகர் என்று விளங்கும் இடத்தில் வசிக்கும் தொழிலாளர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் நிபுணர்களுக்கும் ஏராளமான ரூபாய் செலவில் நவீன வசதிகள் சேகரித்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன மேலும் பெங்களூரில் ஏற்பட்டிருக்கும் டாடா ஆராய்ச்சி சாலையையும் அன்னிய நாடுகளுக்குப் போய் உயர்தரக் கல்வி கற்று வரும் இந்திய மாணவர்களுக்கு பொருள் உதவி செய்யும் முறையும் அப்பிரபல குடும்பத்தாரின் தாராள குணத்தைக் காட்டுகிறது. இந்தியாவிற்குள் தபால்களை ஆகாய விமானங்கள் மூலமாக எடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை வெகு சமீப காலத்தில் இப்பெயர் பெற்ற டாடா கம்பெனியார் பூர்த்தி செய்திருக்கிறார்கள். இவ்வளவு அற்புதமான காரியங்களைச்செய்து அழியாப் புகழ்பெற்ற இக் குடும்பத்தினர் பார்சி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும், பார்சி வகுப்பினர் இந்தியாவிலுள்ள சிறுபான்மை தொகுதியினர்களுள் ஒரு சிறு வகுப்பைச்சேர்ந்தவர்கள் என்பதும் யாவரும் அறிந்த விஷயம் அப்படியிருந்தும் பெரும்பான்மைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிலர் கூட சாதிக்க முடியாத காரியங்களையெல்லாம் இவர்கள் சாதித்துவிட்டார்கள் என்று ஆலோசிக்கும்பொழுது புத்திவான் பலவான் என்கிற உண்மை வெளிப்படுகிறது. இந்த உண்மையை, சற்று நமது மரபினர் சகலரும், ஆறஅமர ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபோலவே தமிழ் நாட்டில் பெருமை வாய்ந்த நகரத்தார் மரபின் முன்னேற்றத்தைப் பற்றி சற்று கவனிப்போம். அவர்களும் ஒரு சிறுபான்மை கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் திரைகடலோடியும் திரவியம் தேடும் சக்தியைக் கொண்டவர்கள். கடவுள் பக்தி, தர்மசிந்தை, திடநம்பிக்கை, விடாமுயற்சி, மனோபலம், புத்திகூர்மை ஆகிய அரும் பெருங் குணங்களைக் கொண்டு வியாபார உலகில் அவர்கள் தேசமெங்கும் புகழ்பெற்றிருக்கிறார்கள். சத்திரங்கள், கோயில்கள் கட்டுவது, புதுப்பித்தல் போன்ற பழையமாதிரி தர்மங்களுக்கு பதிலாக நவீன உலகப் போக்கை அனுசரித்து கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் தங்கள் ஐசுவரியத்தை தற்காலத்தில் செலவிட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது இந்த வகையில் அம்மரபினரில் தலைசிறந்து விளங்குபவர் ராஜா. சர். அண்ணாமலை செட்டியார் அவர்களாவர் என்று சொல்லவும் வேண்டுமோ? சிதம்பரத்தில் ஏற்பட்டுள்ள சர்வ கலாசாலையானது அவரது நிகரற்ற ஈகைக் குணத்தையும் பரந்த ஞானத்தையும் காட்டுகிறது. அவர் போன்ற பெரியோர்களின் உதாரணம் செல்வம் படைத்த சீமான்களுக்கெல்லாம் குன்றின் மேல் தீபம்போல் விளங்குமென நம்புகிறேன்.

சர் ராபர்ட் ஸ்டேன்ஸ்

என் சொந்த அனுபவத்தைப் பொறுத்தும் இச் சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உலகானுபவம் படைத்தவரும், வியாபாரத் திறமை நிறைந்தவருமான சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் அவர்களுடைய வாழ்க்கையின் புனிதத்தைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் தகும். சுமார் சென்ற 25 வருஷங்களாக கோயமுத்தூரிலுள்ள ஸ்டேன்ஸ் கம்பெனியாரிடம் வியாபாரம் நடத்திவருகிறேன். ஆரம்பமுதல் அவர்களிடமிருந்து ஒரு முக்கிய தத்துவத்தை நான் உணர்ந்து நடப்பது சாத்தியமாயிருக்கிறது. அதாவது நாணயக் குறைவான வியாபாரம் ஒருக்காலும் பயன்படாதென்பதாகும். தக்க லாபமடைய சத்தியம் தவறி நடப்பது யுக்தமல்ல. அவசியமுமில்லை. ஒரு வியாபாரிக்கு நாணயமே பிரதான லக்ஷணம். மனத்தூய்மையும் தெய்வபக்தியும் ஜீவகாருண்யமும், நிறைந்தவராகிய சர். ராபர்ட் ஸ்டேன்ஸ் அவர்களுடைய வாழ்க்கை முறையை கவனிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது எனது பாக்கியமென்றே நம்புகிறேன். ஆங்கில வியாபாரிகளில் ஒருவராக இருந்தும், ஐரோப்பிய பிள்ளைகளுக்கு கல்வி வசதி ஏற்படுத்திக் கொடுப்பதில் மனமுவந்தது போலவே இந்திய மாணவர்களுக்கும் கல்வி வசதிக்கு வேண்டிய உதவியை அவர் தாராளமாய்ச் செய்து வருகிறார். அவரும் அவரது குடும்பத்தினர்களும் இந்தியாவையே தங்களுடைய சாஸ்வத இருப்பிடமாக வைத்துக் கொண்டு இந்தியாவும் இங்கிலாந்தும் ஒருங்கே பயன் அடையும் வழியில் இரு தேசத்தினரும் ஒன்றுகூடி பொதுவாக வியாபாரத்தை நடத்துவது சாத்தியம் என்பதை அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வரும் தருவாயில் இந்திய வியாபாரிகளுடைய நிலைமை என்னவென்று கவனித்தால் முன்னிருந்ததைவிட அவர்களுடைய பொறுப்பு அதிகரிப்பதற்கு தகுந்த அளவில் அனுகூலமும் எதிர்பார்க்கக்கூடியதாய் இருக்கிறது. இப்புதிய யுகத்திலே இந்தியாவிலும் பிற நாடுகளிலும் ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளையும் நமது வியாபாரத் தலைவர்கள் ஊன்றி கவனிக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. பழய கிராம வழக்கப்படி பண்டங்களைக்கொடுத்து பண்டங்களை மாற்றும் காலம்போய் அகிலதேச அளவில் தற்கால வியாபாரம் நடந்தேற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் பஞ்சு வர்த்தகம், நூல் வர்த்தகம், நெசவுக்காரர்களின் பொருளாதார நிலைமை ஆகிய விஷயங்கள் மிக்க சிக்கலடைந்து பெரிய பெரிய நிபுணர்களுக்கும் அனுபவசாலிகளுக்கும் எளிதில் புலனாகக்கூடிய நிலைமையில் இல்லாமல் இருக்கின்றன. இல்லாமல் இந்தியாவிலும் இதர நாகரீக தேசங்களிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கவனிக்கும்போதும் கோடிக்கணக்கான மக்கள் இந்தியாவிலும் பிறநாடுகளிலும் வேலையில்லாமல் திண்டாடுவதை கவனிக்கும்போதும் வியாபாரிகள் ஒன்றுகூடி விமோசனம் தேடுவதில் தங்கள் முழு பலத்தையும் கவனத்தையும் செலுத்தவேண்டியது அவசியமானது என்பது வெளிப்படை ஆதலால் ஆற்றலும் அறிவுமுள்ள நம மரபைச் சார்ந்த வியாபாரத் தலைவர்கள் தக்க பரிகாரங்களைத் தேட வேண்டும். நம்மைப்போல வியாபார சௌகரியங்களை அனுபவிக்க முடியாத நமது மரபினர்களுக்கு கூடுமான உதவியை நமது சங்கத்தின் மூலம் செய்து கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். வியாபாரிகள் தொன்றுதொட்டு வழக்கத்தில் வைத்திருக்கும் "மகிமை" என்ற வசூல்முறையானது சுலபமான வழியில் பெரும் தருமகாரியங்களைச் சாதிப்பதற்கு ஒரு சிறந்த சாதனமென்றேகருதுகின்றேன். அதை எட்டு மகிமையாய் நிற்கவிடாமல் சீர்பெறக்கண்காணித்து ஏழ்மைநிலைமையிலிருக்கும் தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து தொழிற் கல்வி, வியாபாரக்கல்வி ஆகிய துறைகளில் தற்காலம் ஏற்பட்டுள்ள வசதிகளனைத்தும் இதன் மூலம் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டும். கூட்டுறவு முறையில் பாங்கிகளும் வியாபாரங்களும் நடத்துவதிலுள்ள நன்மைகளை ஆராயவேண்டும். காலப்போக்கை அனுசரித்து புதிய புதிய துறைகளில் வியாபாரம் செய்யக்கூடிய ஊக்கமும், தைரியமும் சக்தியும் நமது வாலிபர்களுக்கேற்படக்கூடிய வழிகளில் கல்வி புகட்டப்பட வேண்டும்.

"பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே"

காலம் மிக வேகமாயும் மாறுதலடைந்து கொண்டும்போகிறது ஜாதிக்கேற்ற தொழில் என்பதோ அல்லது ஒரு தொழிலுக்குள்ள ஜாதி என்ற குருட்டு சித்தாந்தமோ கிடையாது. ஆதலால் காலத்திற்கேற்றவாறு நம்முடைய ஆசாபாசங்களையும் லக்ஷியங்களையும் மாற்றிக்கொள்ளுவதே சிறந்த மார்க்கம். அப்போதுதான் இந்தப் போட்டி உலகத்தில் அவர்கள் வருங்காலத்தில் தலையெடுக்கவும் அவர்கள் சுற்றத்தாருக்கு வர்த்தக முறையில் உதவி செய்யவும் சாத்தியப்படும். ஒற்றுமை பரஸ்பர உதவி ஏழைகளுக்கு ஊழியம் என்பதே நமது லக்ஷியமாயிருத்தல் வேண்டும். வர்த்தகத்தில் அமரும் வாலிபர்களுக்கு கவி சுப்பிரமணிய பாரதி பாடிய சுவை நிரம்பிய பாட்டுகளைச் சொல்லி தங்களிடம்பணிவுடன் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

முத்துக்குளிப்பதொருதென்கடலிலே
மொய்த்துவணிகர்பலநாட்டினர்வந்தே
நத்திநமக்கினியபொருள்கொணர்ந்து
நம்மருள்வேண்டுவதுமேற்கரையிலே
காசிநகர்ப்புலவர்பேசுமுறைதான்
காஞ்சியிற்கேட்பதற்கோர்
கருவிசெய்வோம்
ராசபுத்தானத்துவீரர்தமக்கு
நல்லியற்கன்னடத்துத்தங்கமளிப்போம்.
பட்டினிலாடையும் பஞ்சிலுடையும்
பண்ணிமலைகளெனவீதிகுவிப்போம்
கட்டித்திரவியங்கள்கொண்டுவருவார்
காசினிவணிகருக்கவைகொடுப்போம்.

'வர்த்தக ஊழியனைப்' பற்றி

அபிப்பிராயங்கள்.

"ஞான தீபம்"

கொழும்பு.

"வர்த்தக ஊழியன்" திருச்சினாப்பள்ளியிலிருந்து, ஸ்ரீமான் டி. வி. கே. நாயுடு அவர்களால் வெளியிடப்படும் மாசிகையின் சில பிரதிகள் வரப்பெற்றேன், வியாபார விர்த்திக்குரிய பல கட்டுரைகள் இதில் காணப்படுவதால், வியாபாரிகள் ஒவ்வொருவரும் இப்பத்திரியை ஆதரிப்பாராக.

"தினகரன்"

கொழும்பு.

திருச்சியில் திரு. டி. வி. கே. நாயுடு அவர்களால் இயற்றப்பட்டு வெளிவரும் "வர்த்தக ஊழியன்" எனும் மாதாந்திரப் பத்திரிகையின் மார்ச்சு மாதப் பிரதியொன்று வரப்பெற்றோம். இது வழக்கம்போல் பல வியாபாரச் சம்பந்தமான செய்திகளும் வியாசங்களும் அடங்கியிருப்பதுடன் தொடர் கதையொன்றும் கொண்டதாயிருக்கிறது. இக்கதைப் பிராமண குடும்பத்தில் ஒரு கலப்பு விவாகத்தைப்பற்றியது.

"சுதந்தரவீரன்"

தூத்துக்குடி.

உலகமே வியாபார மந்தத்தால் கஷ்டப்படு மிக்காலத்தில், வியாபார மந்தத்தைப் போக்கி வர்த்தக கைத்தொழிலுக்கு ஊழியம் செய்து வர்த்தகத்தை யபிவிருத்தி செய்ய "வர்த்தக ஊழியன்" திருச்சியிலிருந்து வெளிவந்திருப்பது வியாபாரிகளுக்கு உற்சாகத்தையூட்டுமென்பதில் சந்தேகமில்லை ஆதலால் சுதேச கைத்தொழிலை விருத்திசெய்ய விரும்பும் எல்லா வியாபாரிகளும் தங்கள் விளம்பரங்களை வர்த்தக ஊழியனுக்குக் கொடுத்தும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

"மலாய மித்திரன்"

பினாங்கு.

"வர்த்தக ஊழியன்" என்னும் பெயர் பூண்ட ஓர் மாதப் பத்திரிகை நம் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அப் பத்திரிகை திரு. டி. வி. கே. நாயுடு அவர்களை ஆசிரியராகக்கொண்டு 24 பக்கங்கள் பூண்டு தமிழ் ஆங்கிலம் இருபாஷைகள் துலங்கிய விஷயதானங்களோடு இனிய நாவல் பகுதிகளுங் கலந்து இந்திய வர்த்தக முன்னேற்றத்துக்குரியத் துறைகளில் தொண்டாற்றும் நோக்கத்துடன் திருச்சினாப்பள்ளியிலிருந்து வெளிவருகின்ற இனிய மாதசஞ்சிகையாகும். அஷ்டதிசைகளின் வர்த்தகானுபவங்களையும், முறைகளையும், இந்திய தேசீய வர்த்தக முன்னேற்பாடுகளையும், நம்மில் ஒவ்வொரு வருமுணர்தலுக்கு இச் சஞ்சிகை அவசியமாவதால் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேருங்கள். வருடச் சந்தா ரூபாய் ஒன்றே.

வியாபாரத் துணுக்குகள்.

(Trade Tit Bits.)

இந்திய சாமான்களை ஆதரிப்பதற்காக இரும்பு குழாய்களுக்கு இறக்குமதிவரி அதிகம் விதிக்கவேண்டுமென்று மைசூர் வர்த்தக சங்கத்தார் இந்திய கவர்ன்மெண்டுக்கு தீர்மானம் செய்து அனுப்பியிருக்கின்றார்கள்.

* * *

பாங்கிங் தொழில் இன்னும் ஆரம்ப நிலைமையிலேயே இருப்பதால் செக்குகளுக்கு ஸ்டாம்பு கட்டணம் விதிப்பது நியாயமல்ல வென எதிர்த்து மைசூர் வர்த்தக சங்கத்தினர் இந்திய சர்க்கார் நிதி மெம்பருக்குத் தந்தி கொடுத்திருக்கின்றனர்.

* * *

இந்தியாவிலிருந்து சுமார் 74 ஆயிரம் வாழைப்பழங்கள் (பனானஸ்) இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு பரீக்ஷை பார்த்ததில் அழுகிப் போகாமல் போய் சேர்ந்திருக்கிறது. இன்னும் ராவல் பிண்டியிலிருந்தும் அம்மாதிரி அனுப்பியிருப்பதாயும் தெரிகிறது இவைகள் அழுகிப் போகாமல் போய் சேர்ந்தால் பல இடங்களிலிருந்து இங்கிலாந்துக்கு பனானஸ் பழங்கள் வரவழைக்க ஏற்பாடுகள் நடைபெறும்.

* * *

இதுவரையிலில்லாத அளவுக்குதுணிகள் விற்பனையின்றித் தேங்கிக் கிடக்கின்றன. ஆலைத்தொழில் மிகுந்த நெருக்கடியான நிலைமையிலிருக்கிறது. ஜப்பானிய இறக்குமதியைத் தடை செய்ய உடனே கையாளப்பட்டாலல்லாமல் நிலைமைக்கு மிஞ்சிவிடும் என்று அகமதாபாத் ஆலை முதலாளிகள் சங்கத்தார் இந்திய சர்க்கார் வர்த்தக மெம்பருக்கு தந்திகொடுத்திருக்கின்றார்கள்.

* * *

பம்பாயில் வெஸ்டர்ன் இந்தியா ஆயில் டிஸ்டிரிபியூடிங் கம்பெனியார் பர்மா ஷெல் கம்பெனியார் டிரேட் மார்க்குகளை உபயோகிக்கின்றார்களென்றும், அவ்விதம் உபயோகிக்காமல் தடை செய்ய வேண்டுமென்றும் பர்மா ஷெல் கம்பெனியார் இன்ஜங்க்ஷன் மனு பம்பாய் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்திருந்தார்கள். ஜட்ஜ் இருதரப்பு வாதங்களையும் கேட்டுக்கொண்டு பிரதிவாதிகள் கேசு தீரும் வரையில் டிரேட் மார்க்குகளை உபயோகிக்கக் கூடாதென்று இன்ஜங்க்ஷன் உத்திரவிட்டிருக்கின்றார்.

இலங்கை இறக்குமதி சங்கத்தின் வருடாந்திர கூட்டத்தில் பிரபல வர்த்தகர் திரு. இ. டி. மாலினியூ என்பவர் ஜப்பான் தேசம் தற்சமயம் உற்பத்தி செய்து விற்கும் சரக்குகளைப் போல வேறெந்த தேசமும் செய்யமுடியாதென்றும், உடனே அதற்கு வேண்டிய பரிகாரம் தேடாமல்போனால் இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள வியாபாரம் க்ஷீணதிசையடைய நேரிடுமென்றும், ஆகையினால் அதை தடுத்து ஜப்பானிலிருந்து ஏற்றுமதி செய்பவர்களுக்கு இலங்கையில் வாங்குபவர்களிடமிருந்து அதிக லாபத்திற்கு சாமான்களை விற்கமுடியாதென்றும்சொன்னார்.

* * *

கல்கத்தாவில் இந்திய தேயிலை தீர்வைகமிட்டியின் 6-வது மாதக் கூட்டம் நடைபெற்றபோது 1934-ம் ௵ மார்ச்சு-௴ 31 தேதி இறுதியாகவுள்ள ஒரு வருஷத்தில் இந்தியாவிலேயே விளம்பர வேலைசெய்ய 5½ லக்ஷ ரூபாய் ஒதுக்கப்பட்டது. இக்கமிட்டி அமெரிக்காவில்தீவிரமாகபிரசாரவேலை நடத்தி வருகிறது. அந்த நாட்டில் 4 லக்ஷத்து 90 ஆயிரம் ரூபாயை செலவிட வேண்டுமென்றும், பிரிட்டனில் 1 லக்ஷத்து 10 ஆயிரம் ரூபாயும், செலவிடவேண்டு மென்றும் தீர்மானித்தார்கள்.

* * *

1933-௵ மார்ச்சு-௴ 8௳ புதன் கிழமைகாலை திருச்சி தமிழ்வியாபாரிகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட கட்டிடத்தில் நடைபெற்றது. அப்பொழுது பல வியாபாரிகள் வந்திருந்தார்கள். தலைவர் திரு. பெ. அந்தோணியா பிள்ளை தலைமை வகித்தார். சங்கத்தின் ஆதரவில் வாசகசாலை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தபடி ஷை வாசகசாலையை திறந்து 'வைக்க "வர்த்தக ஊழியன்" பத்திராதிபர் திரு. டி. வி. கே. நாயுடு அவர்களை கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு. நாயுடு அவர்கள் சில வார்த்தைகள் சொல்லி திறந்து வைத்தார். காரியதரிசி வந்தனோபசாரம் சொன்னபின் கூட்டம் கலைந்தது. வந்திருந்தவர்களுக்கு, சந்தனம், கற்கண்டு, தாம்பூலம் முதலானவைகள் கொடுக்கப்பட்டது.

1932-௵ டிசம்பர்-௴ 25௳யோடு நிலக்கடலை சாகுபடி இம் மாகாணத்தில் 3,494,100 ஏக்கர். சென்ற வருடம் 2,707,500 ஏக்கர் 1,631,200 டன்நிலக்கடலைகிடைக்குமென்றும், சென்ற வருடத்தைவிட 100-க்கு 32 வீதம் அதிகமென்றும் தெரிகிறது. 500 பவுன் எடையுள்ளகண்டி சித்தூர், வடஆற்காடு ஜில்லாக்களில் 20 ரூபாய் முதல் 25 ரூ. வரையில் விற்றதாயும், மற்ற ஜில்லாக்களில் 15 முதல் 20 ரூபாய் வரையில் விற்றதாயும், தென்னாற்காடு ஜில்லாவில் 100-க்கு 75 வீதம் மொத்த விளைவில் குறைவென்றும் தெரிகிறது.

* * *

1932-ம் வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து 1933-ம் வருடம் ஜனவரி மாதம் முடிய சென்னை மாகாணத்தின் நெல் சாகுபடியான நிலங்கள் சுமார் 11,582,000 ஏக்கர். சென்ற வருடம் 11,537,733 ஏக்கர். ஜனவரி மாத கடைசியில் 82 2/7 பவுண்டு எடையுள்ள மணங்கு ஒன்று தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, தென்னாற்காடு ஜில்லாக்களில் ரூ 1—4—0 முதல் ரூ 1—6—0 வீதமும், மற்ற ஊர்களில் ரூ 1—12—0 முதல் ரூ. 2—4—0 வீதமும்விற்றதாம்.

* * *

திருச்சினாப்பள்ளியில் யானைமுடி மார்க்கை ரிஜிஸ்தர் செய்துகொண்டு சுருட்டு வியாபாரம் செய்யும் ஜனாப் சுலைமான் ராவுத்தர் என்பவர் கிரீட யானைமார்க்கை ரிஜிஸ்தர் செய்துகொண்டு சுருட்டு வியாபாரம் செய்யும் ஜனாப் மகமது கூடமியான் சாயபுவின் மீது திருச்சி டவுன் சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தம்முடைய ரிஜிஸ்டர் டிரேட் மார்க்கைப் போலவே உருவத்தை ரிஜிஸ்தர் செய்துகொண்டு வியாபாரம்செய்வதினால் நஷ்டம் ஏற்படுகிறதென்று பிராது செய்திருந்தார். மாஜிஸ்திரேட் விசாரணை செய்ததில் உருவங்கள் இரண்டும் பார்வையில் ஒரே மாதிரியாக யிருக்கிறதென்றும் கிரீட யானைமார்க் வியாபாரி கேசு ஆரம்பித்த பின் ரிஜிஸ்தர் செய்திருப்பதாகவும் ருஜுவாகிறதென்று சொல்லி கிரீட யானை மார்க்கு வியாபாரிக்கி இந்தியன் பினல் கோடு 482வது செக்ஷன்படி 50 ரூபாய் அபராதம் விதித்துகொடுக்கத்தவறினால் ஒருமாதம் சாதாரண காவல் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்.

சி. சோமு பிள்ளை,

இரும்பு வியாபாரம்,

மயிலஞ்சந்தை, திருச்சினாப்பள்ளி.

எங்களிடம் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்த உயர்ந்த பூட்டு தினுசுகளும், பம்பு (pipe) குழாய் பிட்டிங் சாமான்கள் பூராவும் குளவு நாகத்தகடுகளும், உயர்ந்த மார்க்கு சிமிட்டு மூட்டைகளாகவும், பீப்பாய்களாகவும், கட்டிடங்களுக்கு உபயோகப்படும்படியான கர்டர்களும், சகலவிதமான வர்ணம், வார்னீஷ் தினுசுகளும் வெகு சரசமாயும் நயமாயும் கிடைக்கும்.

சகலவித ஸ்டேஷனரி சாமான்களும் தெப்பகுளம் சமீபத்திலிருக்கும் எமது ஷாப்பு கடையில் நயமாய் கிடைக்கும்.

T.R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ், வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

N. B. வெளியூர் ஆர்டர்களுடன் அட்வான்ஸ் முன் பணம் அனுப்புதல் வேண்டும்.

நாணயமாற்றம்.

Exchange (30—3—33)

	பென்சு.
பாங்குரேட் லண்டன் தந்தி	18
பாங்குரேட்லண்டன்தரிசனம்	18
லண்டன் தந்தி விற்கிற விலை.	18 1/32
தரிசன உண்டி விற்கிற விலை	18 1/32
தந்தி வாங்குகிற விலை	18 1/8
ஷை தரிசன உண்டி	18 3/52

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர் லிங் பவுன் 1-க்கு பிராங்கு 86 7/18

சிங்கப்பூர் வட்டம் விற்கும் விலை வெள்ளி 100-க்கு ரூ. 156.

சிங்கப்பூர் வட்டம் வாங்கும் விலை வெள்ளி 100-க்கு ரூ. 150.

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 640.

ஜர்மனி தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 103.

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 400.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 370.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100–க்கு ரூ. 156

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ.94

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டேயல் 100-க்கு ரூ. 120.

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 90.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு கில்டர் 62.

ஜவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் (பெயரளவு)

லண்டன் அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 3.41¼.

பினங்கு நிலவரம் மார்ச்சு 16உ

லண்டன் பேங் டிமாண்டு			2/3 23/32
,, ஒப்பந்தம் (4மாதம்)			2/2 13/16
ஹோங் கோங் ,,	T.	T.	42 நாமினல்
பிரத்தியேக 3 மாதக்கடன்			2/4
,, 3 ,, கடன்பத்திரம்			2/4 ⅛
நியூயார்க் பேங் டிமாண்டு			39¼
பிரான்ஸ்	T.	T.	985நாமினல்
இந்தியா	T.	T.	152½ ,,
ஷாங்காய்	T.	T.	133
கட்டி வெள்ளி			17 11/16

கப்பற்செய்தி.

(Shipping News)

சென்னை துறைமுகத்தில் ஏப்ரல் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களின் பெயர்களும் தேதிகளும்:—

விபாண்டோ 1, மசோபரா, ஜீன்வி பார்டே 2, எரின்புரா 3, பர்மிங்ஹாம், கோக்ரா 4, விச்டெண் பெல்சு 6, மக்பி, ரோஹணா 7, வெனிஸ், இதியோபியா, மண்டாலா 10, நியூயன்பெல்சு10, லாகூர், நகரா 18, ஹாஜிஹான்19, காம்பேன், டல்ஹார்ட் மக்படைன் 20, ரஜுலா, டன்லோ 21, மதரான் 22, மசோப்ரா 24, கிராண்ட், ஓரான் 25, மொனா 30.

வர்த்தக குறி வழக்கு.

கல்கத்தா இம்பீரியல் புகையிலைக் கம்பெனியார், கும்பகோணம் சப்கோர்ட்டில், சுருட்டு வியாபாரம் திரு. சோமு பிள்ளை, திரு. சந்தனம்பிள்ளை இவர்கள் மீது தடை மனு நஷ்ட ஈடு இவைகளை கோரி தாவா செய்திருந்தார்கள். பிரதிவாதிகள் கத்திரி மார்க்கு சுருட்டுகள் செய்து வியாபாரம் செய்வதாயும் அந்த மார்க்கு வாதி கம்பெனியின் வில்ஸ்ஸர்ஸ் சிகரெட்டுகள் போன்ற மார்க்குள்ளதாயிருக்கிறதென்றும் அதனால் தன்வியாபாரத்திற்கும், பொதுஜனங்களுக்கும் இடையூறு உண்டாகிறதென்றும் ஷை வில்ஸர்ஸ் மார்க்கு போட தங்களுக்குதான் இந்தியாவில் பூர்ண பாத்தியதையும் அதிகாரமுண்டென்றும் ஆகையால் பிரதிவாதிகள் இந்த அடையாளங் கொண்ட சுருட்டுகளை வியாபாரத்திற்கு உபயோகிக்கக்கூடாதென்றும் பிராதில் வாதிகள் குறிப்பிட்டிருந்தார்கள். பிரதிவாதிகளும் வாதியும் சேர்ந்து, கோர்ட்டில் ஓர் ராஜி ஏற்பாட்டை செய்து கொண்டு அதன்படி டிக்ரிசெய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். நிரந்தர தடை உத்திரவுக்கு தாங்கள் உடன்படுவதாயும் கத்திரிமார்க்கு போட உபயோகிக்கப்பட்ட சாமான்களை வாதியிடம் ஒப்புவித்து விடுவதாயும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள். நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை யென்று வாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தப் பிரகாரம் கோர்ட்டார் தீர்ப்பு செய்து இருதரப்பிலும், தங்கள் தங்கள் செலவை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று உத்திரவிடப்பட்டது.

போட்டிப் பரிசு

(Prize Competition.)

“ எந்த வர்த்தகத்தை ஆரம்பிப்பது ”

“ எந்த வர்த்தகத்தை ஆரம்பிப்பது ” என்ற விஷயமாக, கீழ்கண்ட குறிப்புகளைக்கொண்டு வர்த்தக ஊழியன் இரண்டு பக்கங்களுக்குள் அடங்கும்படியாக வியாசம் எழுதி ஏப்ரல் மீ 20 உக்குள்பத்திராதிபருக்கு வந்து சேரும்படியாக அனுப்பவேண்டும். முதன்மையாகயிருந்த வியாசத்துக்கு ஐந்து ரூபாயும் இரண்டாவதாக யிருந்த வியாசத்துக்கு இரண்டு ரூபாயும் கொடுக்கப்படும். மற்றவர்களுக்கு ஒரு வருடத்திற்கு பத்திரிகையை இனாமாக அனுப்பப்படும்.

குறிப்புகள் :—(1) இன்ன வியாபாரம் (2) ஆரம்பத்தில் ஏற்படும் இடையூறுகள் (3) எவ்விதம் அவைகளை நிவர்த்தி செய்வது (4) வர்த்தகம் செய்பவர் நடந்து கொள்ள வேண்டிய வழிகள் (5) அந்த வர்த்தகத்துக்கு என்ன புஸ்தகங்கள் வாசிக்கவேண்டும் (6) எவ்விதம் அந்த வர்த்தகத்தை விருத்தி செய்வது (7) போட்டியை எப்படி சமாளிப்பது (8) எப்படி விளம்பரம் செய்வது (9) அதனால் கிடைக்கும் லாபம் (10) எவ்வளவு மூலதனம்.

பத்திராதிபர்,
வர்த்தக ஊழியன்,
திருச்சினாப்பள்ளி.

வர்த்தக ஊழியனைப் பற்றிய அபிப்பிராயம்.

“ குடி அரசு ”

ஈரோடு.

திருச்சியினின்று தோழர் டி. வி. கே. நாயுடு அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் “வர்த்தக ஊழியன்” என்ற மாத சஞ்சிகை வரப்பெற்றோம். இதில் வர்த்தக முன்னேற்றங்கருதிய கட்டுரைகள், செய்திகள் முதலியன காணப்படுவதோடு வர்த்தக சம்பந்தமான கணக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி சரக்குகள் முதலியன பல புள்ளி விபரங்களோடு காணப்படுகின்றன. வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் உபயோகமானது.

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு அ.	ரேட்டு மணங்குக்கு பை.	எந்ததேதியிலிருந்து	ஷரா
நிலக்கரி தூள்	மதுரை	மதராஸ் பீச்	3	0	1—3—33	
,,	நாகபட்டணம்	,,	3	0	,,	
,,	,,	பல்லாவரம்	3	0	3—3—33	
,,	,,	பரங்கிமலை	3	0	,,	
,,	,,	தாம்பரம்	3	0	,,	
விறகு	அங்காடிபுரம்	போத்தனூர்	3	3	10—3—33	
,,	மெலட்டூர்	,,	3	3	,,	
,,	நிலாம்பூர்ரோடு	,,	3	3	,,	
,,	வாணியம்பலம்	,,	3	3	,,	
,,	மாயனூர்	திருச்சினப்பள்ளி	2	3	1—3—33	
வைக்கோல்	சோளவந்தான்	கல்லல்	2	5	16—2—33	
,,	,,	காரைக்குடி	2	7	,,	
,,	,,	ராமேஸ்வரம்	3	7	,,	
நிலக்கடலை	ஆரணி ரோட்	கூடலூர்	5	0	5—3—33	
,,	,,	புதுச்சேரி	5	0	,,	
,,	சங்கரி துருக்கம்	கூடலூர்	8	0	,,	
பனமரத்து பாய்	கள்ளிக்கோட்டை	மங்களூர்	2	6	15—2—33	
தேக்கு	,,	,,	2	10	,,	
,,	பொள்ளாச்சி	கோயம்புத்தூர்	1	10	10—3—33	
சின்கோனா பட்டை	கொடைக்கானல் ரோடு	உதகமண்டலம்	16	0	1—4—33	குறிப்பிட்ட தேதிகளிலிருந்து ரேட்டுகள் ரத்து செய்யப்படும்.
விறகு	லாலாபேட்டை	திருச்சினப்பள்ளி	1	8	,,	
,,	தானூர்	கோயம்புத்தூர்	3	0	,,	
மெஷின்கள்	தூத்துக்குடி	அம்பா சமுத்திரம்	3	0	15—4—33	
விறகு	நாகதுணை	சேலம் மார்க்கட்	3	1	,,	
,,	ராயகோட்டை	,,	2	11	,,	
,,	நீலாம்பூர் ரோடு	கள்ளிக்கோட்டை	2	0	,,	
,,	,,	பெரோக்	2	0	,,	
,,	,,	கல்லாயி	2	0	,,	
,,	வாணியம்பலம்	கள்ளிக்கோட்டை	2	0	,,	
,,	,,	பெரோக்	2	0	,,	
,,	,,	கல்லாயி	2	0	,,	
,,	அங்காடிபுரம்	கள்ளிக்கோட்டை	2	0	,,	
,,	,,	பெரோக்	2	0	,,	
,,	,,	கல்லாயி	2	0	,,	
,,	மெலட்டூர்	கள்ளிக்கோட்டை	2	0	,,	
,,	,,	பெரோக்	2	0	,,	
,,	,,	கல்லாயி	2	0	,,	

ரயில்வே பகுதி.

(Railway Matters.)

பெங்களூர் திரு ஹாஜி நூர் மகமது என்கிற வியாபாரி எம். எஸ். எம். ரயில்வேக்காரரிடம் உப்பு மூட்டைகள் ஒப்புவித்து அனுப்பியதில் 19 மூட்டைகள் சேதமடைந்து போனதாயும் அதற்காக பிராது போட்டதில் கீழ்கோர்ட்டில் ரூ. 169—8—0 ரயில்வே கம்பெனியார் மேற்படி வியாபாரிக்கு கொடுக்கும்படியாக தீர்ப்பு செய்திருந்தார்கள். இதன்மேல் வாதி சேதமடைந்ததையும் கம்பெனி வேலைக்காரர்கள் தான் ஜவாப்பென்றும் நன்றாக ருசு செய்யவில்லையென்றும், கம்பெனிபேரில் பிராது போடாமல் ஏஜண்டின் பெயரைக் குறிப்பிட்டு போடப்பட்டிருப்பது சட்டப்படி செல்லாதென்றும், ரயில்வே கம்பெனியார் அப்பீல் செய்திருந்தார்கள். ஜட்ஜ் கம்பெனிக்கு சாதகமாக தீர்ப்பு செய்தார்.

* * *

எம். எஸ். எம். ரயில்வே கம்பெனி மீது சுந்தர்ஜி காளிதாஸ் என்பவர் புகையிலை அனுப்பினதில் சேதப்பட்டுப் போன காரணத்திற்கு நஷ்டஈடுகேட்டு சில்டா ஸ்மால்காஸ் கோர்ட்டில் பிராது செய்திருந்தார். நஷ்டஈடு கொடுக்கும்படி ஸ்மால்காஸ் ஜட்ஜ் தீர்ப்பு செய்திருந்தார். அதன்மேல் ரயில்வே அதிகாரிகளினால் தப்பிதம் யாதொன்றும் இல்லையென்றும் தெய்வாதீனமாக சேதமடைந்ததற்கு தாங்கள் ஜவாப்தாரிகளல்லவென்றும் ரயில்வே கம்பெனியார் அப்பீல் செய்துகொண்டார்கள். ஜட்ஜ் அப்பீலை ஏற்றுக்கொண்டு கீழ் கோர்ட்டு தீர்ப்பை ரத்து செய்துவிட்டார்.

வர்த்தக ஊழியன்

திருச்சினப்பள்ளி
1933-ஹ ஏப்ரல்-மீ

நெசவு தொழிலுக்கு பாதுகாப்பு.

(Protection for textile Industry.)

ஜப்பான் ஜவுளிகள் இந்தியாவில் ஏராளமாக இறக்குமதியாகின்ற காரணத்தினுல் பம்பாயில் பல மில்கள் மிகவும் கஷ்ட நிலைமையை அடைந்து வருகிறது. சிலமாதங்களாக இறக்குமதியான கணக்கே இதற்குபோதிய ஆதாரமாகும். ஜப்பான் சாமான்களுக்கு 100-க்கு 100வரிவிதித்தாலும்கூட இந்திய தொழிலுக்கு போதிய ஆதரவு அளிக்கமுடியாது. சென்ற ஆறு மாதங்களாக 100-க்கு 30 தரிகள் வேலை செய்யாமலிருந்தனவாம். வர வர இன்னும் பல வேலை செய்யாமலிருக்கின்றன. இந்திய நெசவுமில்களின் தற்கால நிலைமையைப்பற்றி ராஜாங்கசபையில் கனம் மேத்தா அவர்கள் பேசினதாவது:—

"ஒருகாலத்தில் உன்னதநிலைமையிலிருந்த நெசவுதொழில் இப்பொழுது க்ஷீணதிசையை அடைந்து வருகிறது. வருந்தக்கூடிய நிலைமைதான். லாபம் கிடையாது. பங்குக்காரர்களுக்கு யாதொன்றும் கிடைப்பதில்லை. வருடா வருடம் லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டத்தில் மில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. நெசவுத் தொழிலுக்கு ஏற்பட்ட கஷ்டத்தினுல் பம்பாய் நகரம்தான் முதன் முதலாக பாதிக்கப்பட்டது. அதற்குநான்கு காரணங்கள் உண்டு. (1) பம்பாய்க்கு சமீபத்தில் எந்த இடத்திலும் பருத்தி விளையாமலிருந்ததினுல் மில்களின் உபயோகத்திற்கு வேண்டிய பருத்திவெளியிடங்களிலிருந்து இறக்குமதிசெய்ய நேரிட்டது. (2) மில்களில் தயார் செய்யப்பட்ட ஜவுளிகள் பம்பாய் நகரத்தில் விலையாகாமலிருப்பதினுல் இந்தியாவின் பல பாகங்களுக்கு ரயில் மூலமாக அனுப்ப வேண்டியதாகயிருக்கிறது. (3) நெசவு தொழில் செய்யப்படுகின்ற இடங்களில் வேலைசெய்பவர்களுக்கு கொடுக்கப்படும் கூலியைவிட பம்பாயில் 100-க்கு 20விதம் அதிகம் கூலி கொடுக்கவேண்டியதாகயிருக்கிறது. (4) முனிசிபல் வரி, தண்ணீர் வரி முதலானவைகள்." ஒவ்வொரு வருடமும்முனிசிபால்வரி, தண்ணீர் வரி மட்டும் அநேக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கொடுக்க வேண்டியதாகயிருக்கிறது. ஆனுல் பம்பாயை சுற்றி உள்ள இடங்களில் உள்ள மில்களுக்கு இம்மாதிரியான வரி கிடையாது. ஆகையினுல் ஷை மில்களில் உற்பத்திசெய்யப்பட்ட ஜவுளிகள் பம்பாய் நகரத்தில் மிகவும் மலிவாக விற்கப்படுகிறது. இந்த மில்களுடன் போட்டிபோட பம்பாய் மில் சொந்தக்காரர்கள் தங்களுடைய செலவை குறைக்க எண்ணி தொழிலாளர்களுக்கு கூலியை 1929-30 வருஷத்தில் 100-க்கு 30 விதம் குறைத்ததின் காரணமாக தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தாகள். வேலை நிறுத்தம் சுமார் 10 மாதங்கள் நீடித்து நின்றது. இதனுல் சுமார் 18 கோடிரூபாய் மில் சொந்தக்காரர்களுக்கு நஷ்டமேற்பட்டது. அந்த சமயத்தில் ஆமதாபாத் மில்காரர்கள் மிகுந்த லாபமடைந்தார்கள். ஆனுல் ஜப்பான் தேசத்திலிருந்து அபரிமிதமாக வந்த ஜவுளிகளினுல் இந்த மில்களுக்கும் ஆபத்து நேரிட்டதோடும் அவர்களுடைய ஜவுளிகளை அசலுக்கும் விற்கமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். போட்டியின் காரணமாக ஆமதாபாத், புரோச், கேக்வார் ஸ்டேட் முதலான இடங்களிலும் இன்னும் மற்ற இடங்களிலும் மில்களை மூடிவிட தீர்மானித்து விட்டார்கள். பருத்தியின் விலைக்கே ஜப்பான் ஜவுளிகள் இந்தியாவில் விற்கும்படியான போட்டி ஏற்பட்டது. ஜப்பான் மில்காரர்கள் பருத்தியை இந்தியாவில்வாங்கி, கப்பல் சார்ஜ், ஏற்றுமதிவரி, இன்சூரன்சு சார்ஜ் முதலானவைகளைகொடுத்து ஜப்பானுக்கு கொண்டுபோய்ஜவுளிகளாக செய்து மீண்டும் எல்லா சார்ஜ்களும் கொடுத்து பருத்தி என்ன விலைக்கு இந்தியாவில் வாங்கினுர்களோ அதே விலைக்கு ஜவுளிகளை கொடுத்தால் இந்திய மில் வர்த்தகர்கள் என்ன செய்வார்கள். இந்திய வர்த்தகம் எப்படி செழித்தோங்கும். உதாரணமாக பம்பாய் மில் சொந்தக்காரர்கள் ஜவுளிகளை பவுன் ஒன்றுக்கு ஐந்தணுவிதம் விலைபோட்டு தீர்வை 0—5—3 சேர்த்தால் அசல் 0—10—3 அடங்குகிறது. ஆனுல் ஜப்பான் காரர்கள் பவுன்ஒன்றுக்கு 5 அணுவீதம் கொடுக்கிறுர்கள். ஜப்பான் தேசத்து என் மதிப்புக் குறைந்து போனதின் காரணமாக ஜப்பான் தேச ஜவுளிகள் இந்தியாவிற்கு ஏராளமாக அனுப்பப்படுகின்றன. இந்தியா கவர்ன்மெண்டாரும் மில் சொந்தக்காரர்களும்சேர்ந்துஎன்ன காரணத்தினுல் ஜப்பானிய சரக்குகள் ஏராளமாக குவிந்து வருகின்றதென்பதை யோசிக்கவேண்டியதில்லை. ஆனுல் இதைத் தடுக்க

சிறுமணித்திரள்

(Notes)

வாய்தா தள்ளுபடி:—

சென்னை மாகாணத்தில் விலைவாசிகள் குறைந்திருப்பதின் காரணமாக நிலச்சுவான்தார்கள் தங்களுடைய நிலங்களின் வாய்தா பணத்தை கொடுக்கமுடியாத நிலைமையிலிருந்ததை சென்னை சட்டசபையில் தீர்மான மூலமாக கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டி வாய்தாவை குறைக்கும்படி கேட்டுக்கொண்டதை அனுசரித்து கவர்ன்மெண்டாரும் விசாகபட்டணம், கீழ் கோதாவரி, மேல் கோதாவரி, கிருஷ்ணா, பெல்லாரி, அனந்தப்பூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், தென் ஆற்காடு மதுரை ஜில்லாக்களிலும், வட ஆற்காடு ஜில்லாவில் திருவண்ணாமலை, செங்கம் தாலுக்காக்களிலும், மலபார் ஜில்லாவில் சில இடங்களிலும், நீலகிரி ஜில்லாவில்கூடலூர் தாலுக்காவிலும் ரூபாய்க்கு இரண்டணா வீதம் வாய்தாவில் குறைத்து வசூல் செய்யும்படியாக உத்திரவிட்டிருக்கின்றார்கள். விவசாயிகளுக்கு தற்சமயம் சிறிதேனும் சௌகர்யம் ஏற்படுத்திக் கொடுத்ததற்காக கவர்ன்மெண்டாருக்கு நமது வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வர்த்தக பிரசிடெண்டு :—

இந்திய சட்டசபையின் தலைவராக போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கோயம்புத்தூர் ஜில்லா இந்தியவர்த்தக சங்க தலைவர் கனம் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு வர்த்தகர்களின் சார்பாக எமது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வர்த்தகர்களுக்கு விடுதலை எப்போ?

வாத்தகர்களுக்கு இன்றியமையாதது கடிதப் போக்கு வரத்துதான். இதற்கு அனுசரணையாகயிருப்பது தபால்கள். தபால் கட்டணம் சில ஆண்டுகளுக்குமுன் மிகவும் குறைந்த விகிதத்திலிருந்தது அப்பொழுது வியாபாரம் அபரிமிதமாக நடைபெற்றது. சில காலமாக தபால் கட்டணங்கள் உயர்ந்து வர்த்தகர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள். இவ்வருடமாகிலும் தபால் கட்டணத்தை குறைப்பார்களா யென்று வர்த்தகர்கள் ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய ஆசையில் மண்விழுந்தது. டெல்வி சட்டசபையில் பல அங்கத்தினர்கள் தபால் கட்டணங்களை குறைக்கவேண்டுமென்று பிரயாசைப்பட்டும் சாதகமேற்படாமல் போனதற்காக நாம் வருந்தாமலிருக்கமுடியாது. இருந்தபோதிலும் வர்த்தகர்கள் விடாமுயற்சியுடன் தபால் கட்டணத்தைக் குறைக்க வழிதேடுவார்களென்று நம்புகிறோம்.

செக்குகளுக்கு ஸ்டாம்பா:—

1933—34ம் வருட பட்ஜட்டில் இந்திய கவர்ன்மெண்டார் வருமானத்தை விருத்திசெய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பாங்குகளில் உபயோகப்படுத்தும் செக்குகளிலும் ஸ்டாம்புகள் ஒட்ட வேண்டுமென்று பிரேரேபணை கொண்டு வந்திருந்தார்கள். பாங்குகளில் பெரும்பாலும் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொண்டிருப்பவர்கள் வாத்தகர்கள் ஆகையினால் அவர்களுக்கு கஷ்டத்தை கொடுக்க கவர்ன்மெண்டுக்கு எண்ணம் போலும் இதை ஆக்ஷேபித்து பல பாங்குக்காரர்கள் தந்திமூலம் தங்களுடைய அதிருப்தியை தெரிவித்துக்கொண்டார்கள். இந்திய சட்டசபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டபொழுது செக்குகளுக்கு ஸ்டாம்பு விதிப்பது கூடாதென்று 48 வோட்டுகளும், விதிக்க வேண்டுமென்று 40 வோட்டுகளும் கிடைத்ததினால் வர்த்தகர்களுக்கு சௌகர்யமேற்பட்டது.

மைசூர் வர்த்தகம்:—

மைசூர் சமஸ்தான வர்த்தக இலாகாவின் 1931-32 வருட அறிக்கை நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. சமஸ்தானத்தில்வர்த்தகம் அவ்வளவு மோசமாகயில்லை. சோப்பு வியாபாரத்தில் மட்டும் முந்தின வருடத்தைவிட பிரஸ்தாப வருடத்தில் சுமார் 1,47,000 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. கொர்ப்ஸ்டோன் என்கிற கற்கள் 3,670 டன் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இதன் கிரயம் சுமார் ரூ. 1,37,000 கவர்ன்மெண்டார் தொழிற்சாலைகளுக்கு ரூ. 44376 கடனாகக் கொடுத்து உதவியிருக்கின்றார்கள். தொழிற்சாலைகளிலிருந்து கவர்ன்மெண்டுக்கு வரவேண்டிய தொகை ரூ. 241197—9—0 மத்யதொழிற்சாலையில் 122147 ரூபாய்க்குவேலை

தகுந்த வழி ஜப்பான் ஜவுளிகளுக்கு இறக்குமதி வரியை அதிமாக விதிக்க வேண்டுவதுதான்.

ஆனால் இந்திய சட்டசபையில் வர்த்தக மெம்பர் சர். ஜோசப் போர் பருத்தி தொழில் பாதுகாப்பு சட்டத்தை (The Cotton Industry Protection Act) இன்னும் அக்டோபர்மாதம் வரையில் நீடித்து வைக்கவேண்டுமென்று கொண்டுவந்த மசோதா நிறைவேறியிருப்பது மில் சொந்தக்காரர்களுக்குசாதகமாகயிருக்குமென்பதில் ஆக்ஷேபனை யில்லை. இதன் மத்தியில் வரி விசாரணை போர்டாரும் தங்களுடையசிபார்சுகளை அனுப்பிவிடுவார்கள். அப்பொழுது ஜப்பான் ஜவுளிகள் இந்திய மார்க்கட்டை ஆக்ரமித்துக் கொள்ளாமல் வழிதேடிக்கொள்ள சௌகரியமாகயிருக்குமென்பதற்கு ஆக்ஷேபனையிருக்காதென்று நம்புகிறோம்.

—

கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. மைசூரிலிருக்கும் பட்டு தொழிற்சாலையில் 6132 கெஜம் பட்டு துணி நெசவு செய்யப்பட்டிருக்கிறது. ஜில்லாக்களிலும் தாலூக்காக்களிலும் தொழிற்கல்வி சாலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் பலர் வாசித்துவருகின்றார்கள். முக்கியமாய் 285 பெண்கள் தொழில் முறையைக் கற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இன்னும் பலஇனங்களில் விருத்தியாம்சத்தையே காண்பிக்கப்பட்டிருக்கிறது. வர்த்தக இலாக்கா டைரக்டர் ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு திருப்திகரமாக நடைபெற்றிருக்கிறதென்றும், டைரக்டர், சிப்பந்திகள் இவர்களை பாராட்டி தங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கவேண்டுகிறோம்.

வர்த்தக பிரதிநிதிகள்:—

இந்தியாவுக்கு புதிதாக அளிக்கப்போகும் அரசியல் சீர் திருத்தத்தில் வர்த்தக வகுப்பினர்களுக்காக சென்னைக்கு 6 ஸ்தானங்கள் பம்பாய்க்கு8, வங்காளத்திற்கு15, ஐக்கிய மாகாணத்திற்கு 3, பஞ்சாப்புக்கு 2, பீகார் ஒரிஸ்ஸாவுக்கு 4, மத்யமாகாணத்திற்கு2, அஸ்ஸாமுக்கு 6, வீதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மிகவும் குறைவென்றும் அதிகஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்பது நமது அபிப்பிராயம். நமது அபிப்பிராயத்தை யொட்டி சென்னை சட்டசபையில் சீர்திருத்தத்தை பற்றி பேசுகையில் செட்டிநாட்டு குமாரராஜா திரு. எம். எ. முத்தையா செட்டியார் ஐரோப்பிய வர்த்தக வகுப்பினருக்கு நான்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், இந்திய வத்தக பிரிவினருக்கு மிகவும் குறைவான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், சென்னை மாகாணத்துக்கு இரண்டு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், இதை நான்கு ஸ்தானங்களாக ;வேணும் உயர்த்தப்பட வேண்டுமென்றும், இந்திய வகுப்புக்கும் வேண்டிய அளவு பிரதிநிதித்துவம் ஏற்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தி யிருப்பதை கவனிக்க வேண்டுகின்றோம்.

Trade in Mysore.

A copy of the Report on the working of the Department of Industries and Commerce of the Mysore Government for 1931-32 received by us, shows that the trade in Mysore have not been greatly affected by the trade depression as is found in British India. The Government were liberal in granting loans to the extent of Rs. 44376, which show that the Govt. have been taking a good deal of interest in the question of rendering financial aid to the Industries. It is a great credit to the Department of Industries for earning a net profit of Rs. 1,47,000 nearly 30 per cent in the Govt. Soap factory, during the year, while the total sales went up to Rs. 4,94,359. The Factory, in addition to soaps produced several toilet preparations of high quality, such as Vanishing Creams, Boot Polishes etc. and these have been very well appreciated by the market. The Silk Industry, which is a growing concern in the State, show a good progress as is evident from the evidence of Mr. N. Rama Rao, the Director before the Tariff Board. Special mention to be made of the Industrial Education imparted to 285 women. During the year under report 3670 tons of kerbstones valued at Rs. 136750 were exported to England. The Department has been able to prove that a good business in this commodity can be built up. This shows that the Govt. are taking great interest in the foreign trade also. On the whole as remarked by the Govt. the working of the Department was satisfactory and we also record our appreciation of the work of Mr. N. Rama Rao, the Director & his Staff, as the Govt did in their concluding para of the report.

மதிப்புரை.

(Reviews)

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்:-பெரிய காஞ்சீபுரம், 40. ராஜவீதி, ஜவுளி வியாபாரம் நாஸ்திகன் திரு. சி. கே. குப்புசாமி அவர்களிடமிருந்து ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் என்கிற புஸ்தகம் வரப்பெற்றோம். இந்த புஸ்தகத்தில் ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் கடவுள் உண்டா இல்லையா யென்று தர்க்கம் நடைபெற்றவிதமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் சுயமரியாதைக்காரர்களின் ஒரு சாரார் கடவுள் இல்லையென்று சொல்கின்றதற்கு ஆதாரமாக இப்புத்தகம் எழுதப்பட்டிருப்பதாக தெரிகிறது. இருந்தபோதிலும் ஆஸ்திகர்களும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்து என்ன எழுதியிருக்கிறதென்று தெரிந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம். புத்தகத்தின் விலை அணா 6.

பத்திரிகைகள்:—

கீழ்கண்ட பத்திரிகைகள் மார்ச்சு மாதத்தில் வரப்பெற்றோம்.

குலாலமித்திரன்	மாசி-மீ
இந்திய விவசாயம்	ஜனவரி-மீ
விநோதன்	பங்குனி-மீ
ஆனந்த போதினி	மார்ச்சு-மீ
பாரத ஜோதி	”
குடியரசு	26—2—33
முரசு	5—3—33
சுதந்தரவீரன் 4-3-33	25—3—33
தினகரன்	13—3—33
மலாயமித்திரன்	மார்ச் 11, 13, 14, 15, 16, 17 உ
பர்மா நாடு	பிப்ரவரி, 20, 27, மார்ச்சு, 6, 3, 20உ
Indian Mirror	February 25, March, 4, 11, 18, 25.
Commercial India	March.

“தினகரன்”

கோழும்பு.

திருச்சினுப்பள்ளியில் திரு. டி. வி. கே. நாயுடு அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் “வர்த்தக ஊழியன்” என்னும் தமிழ் மாதாந்திரப் பத்திரிகையின் செப்டம்பர் இதழ் வரப்பெற்றோம். இதில் வியாபாரத்தை எப்படி விருத்தி செய்வது, ரயில்வே கமிஷனரிடம் வியாபாரிகளின் முறையீடு, கப்பல் செய்தி, பிரிட்டனில் வருமான வரி என்ற வியாசங்களும், கோபாலன் என்ற கதையும் வேறு சில வியாபாரத் துணுக்குகளும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் வருமாந்த சந்தா ரூ. ஒன்று. தனிப்பிரதி விலை அணா ஒன்று.

ராஜம்—சமூகசீர்திருத்தக் கதை.

(Social Reform Novel.)

(எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

அத்தியாயம் 8.] [மார்ச்சு மாதத் தொடர்ச்சி.

அந்த அழகிய சிறிய ரங்கனாதபுரம் கிராமத்திலுள்ள ப்ராமணர்கள் பலரும் ஸ்திரீகள் சிலரும் ஆள் முழுங்கியாற்றில் ஸ்நானம் செய்யச்சென்றனர். சொம்புஸ்தாலி மடிஸஞ்சி முதலிய ஆடம்பரங்களுக்குக் குறைவில்லை. அக்ரமங்களும் பொய் சொல்லுதலும், பக்கக்குடிகளைப் பாழாக்குதலும், பொறாமை கொள்ளுதலும், கோர்ட்டு வழக்குகளை விலை கொடுத்து வாங்குதலும், ஆகிய இது போன்ற பல துர்காரியங்களைச்செய்வதிலேயே பலர் அதிக ஆவல் கொண்டவர்களென்றும் இவ்வித எண்ணங்களை காலை ஸ்நான ஜெபதபங்கள் முடிக்கும் போதும் பூஜா காலங்களிலும் நினைப்பது வழக்கம் என்றும், பலர் சொல்லக் கேட்டதுண்டு. அந்த ரங்கனாதபுரத்து கோபாலய்யருடைய வீட்டுக்கு எதிரில் ஓர் கூரைக்கட்டிடம் ஒன்று இருக்கிறது. அவ்வீட்டுத் தெருத்திண்ணையில் சிறிது நேரம் மறைவாக நாம் உட்கார்ந்து நடக்கும் வைபவங்களைக்கேட்டு ஆனந்திப்போம். அந்த ரெங்கனாதபுரத்தில் இக் கூரைவீட்டுக்காரரும் ஒரு பெரிய மனிதராகவே அவ் வூராரால் கருதப்படுபவர் இதர் தான் ப்ரக்யாதி பெற்ற போக்கிரி குண்டுக் காலைப் பொன்னம்பல தீக்ஷதர். இவர் வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை முதலியவற்றில் முன்னிற்பவர். இவர் நமது அய்யருக்கு எப்போதும் நித்யசத்ருவாயிருந்து, அவரால் கோபால அய்யரும் சுமார் 4500 ரூபாய்வரைக் கோர்ட்டில் இழந்தார். எப்போது கோபால அய்யரை அடக்கலாமென ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருப்பவர்.

இந்த புண்ய மகானுபவர் அன்றைய தினம் அவ்விளங்காலை நேரத்தில்-சுமார் எட்டுமணியிருக்கும் - அவர் ஸ்நானம் செய்து, தெருத்திண்ணைக் கம்பமோரமாக கிழக்குமுகமாக உட்கார்ந்து கொண்டு, சந்தியாவந்தன, சூரியநமஸ்காரியாதிகளைச் செய்து கொண்டிருந்தார். காதில் குண்டலங்கள் தொங்கின. ருத்ராக்ஷமாலைகள் அடுக்கடுக்காய் மார்பின் மேல் விளங்கின. மார்பில் யோக வேஷ்டி போட்டு, ஒரு தலைப்புக்குள் தன் வலது கையை வைத்து, கையின் விரல்களால் ருத்ராக்ஷமாலையின் காயை ஒவ்வொன்றாய்த் தள்ளிக்கொண்டிருந்தார். வாயும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. ஆனால் உண்மையில் பக்தியுடன் ஒன்றும் செய்யப்படவில்லை. மந்திரமும் புஸ்தகத்திலில்லாததுதான். மனமும் வேறுபட்டு எந்தக் குடியைக் கெடுக்கலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்து கிடந்ததுபோலும்.

தன் பின் பக்கத்தில் ஏதோ சற்று சத்தம் கேட்டது, உடனே திரும்பிப் பார்த்து "வாருங்கோ, ஐயா! உட்காருங்கள் இங்கே" என்று சொல்லித்தன் யோக வேஷ்டியால் பூமியைத்தட்டி; தன்கையால் இடத்தைச்சுட்டிக் காண்பித்தார். ஜபதபமெல்லாம் சரேலென நின்றுபோயின. வந்தவரும் "நாராயணா, மகாதேவா" என்று சொல்லிக் கொண்டே நாகரீகமாக உட்கார்ந்தார்.

கேள்வி: 'ஸ்வாமி! தாங்கள்எவ்விடம்'

விடை: "நான் இருக்கிறது காஞ்சீபுரம்"

கே: "அப்படியா! ஏதாவது உத்யோகம் உண்டோ? தங்கள்சட்டை குல்லாய் முதலியவைகளைப் பார்த்தால் ஒரு பெரிய உத்யோகஸ்தர் என்றே நினைக்கிறேன்."

வி: எல்லாம் தங்களைப்போன்ற பெரியோரது ஆசீர்வாதத்தால் தான்."

கே: "அதுசரி, இப்பொழுது தாங்கள் எங்கே யிருக்கிறீர்"

வி: "ஹைதராபாத்தில் நவாப் அரண்மனையில் 120 ரூபாய் சம்பளத்தில் மைனர் எஸ்டேட் மானேஜராக இருக்கிறேன்."

கே: "தங்களுக்கு விவாஹம் ஆயிற்றோ?"

வி: "இன்னும் ஆகவில்லை. கட்டமட்டும் கலியாணக்கட்டுத்தான்."

கே: "அதற்கென்ன, உத்யோகதோரணையில்அப்படிதானே இருக்கவேண்டும்.'

தீக்ஷதருக்கு மனதுக்குள் சந்தோஷம் பிறந்துவிட்டது. குடித்தனம் குட்டிச் சுவர் என்றே தீர்மானம் தீக்ஷதரால் செய்யப்பட்டது. தான் இத்தனை நாளாய் மனதுக்குள் வைத்திருந்த எண்ணமெல்லாம் நன்றாக பலித்ததெனநினைத்து மனம் பூரித்தார். வந்தவனோ உண்மையில் மாத்வ வகுப்புப்பையன், தேசசஞ்சாரி தகப்பனாருடன் சண்டையிட்டுக்கொண்டுகையில்வேண்டிய ரூபாயுடன் வெளிப்புறப்பட்டவன், உத்தியோகத்தையே இதுவரை அடைந்து பயனடையாதவன் அவன்படிப்டோக்கிரம்பவும் மட்டுத்தான், ஆடைகளிலும், விநோத கைகுட்டைகளிலும் மான் தோலால் செய்த ஒரு பெரிய ரெயில் பையிலும், கால்பூட்ஸ் முதலியவைகளிலும் பணம் செலவழித்துக்கொண்டு வழிப்பிரயாணம் செய்வதால் ஒருதக்க உத்தியோகஸ்தன் என்றே பிறர் நினைக்கும்படி நேரிட்டது.

கே: "தாங்கள் தீக்ஷதரோ? இதுதானே தங்கள் சொந்தகிரஹமோ"

வி: "ஆமாம் உள்ளே வாரும்."என்று சொல்லிக்கொண்டே உள் நுழைந்தார். வந்தவரும் பின் தொடர்ந்து செல்ல; இருவரும் உள் பெரிய தாழ்வாரத்திலுட்கார்ந்தார்கள். வந்தவனும் தான் இன்னானென்றும், தன் சொந்த பிராமண வகுப்பையும், தீக்ஷதருக்கு தெரிவிக்கக்கூடாதென்றும் தன் பெயரையும் தன் வகுப் பையும் மாற்றிச் சொல்ல வேண்டு மென்றும் தீர்மானித்தான்.

கே: "ஸார், நீங்கள் பிராமண வகுப்பில் எதைச் சேர்ந்தவர்."

வி: "நான் ஸ்மார்த்தரில், பிரஹசரணத்தைச் சேர்ந்தவன்."

கே: "அப்படியா தங்கள் பெயர் என்ன?"

வி: "என் பெயர் ராமய்யர்"

கே: "அப்படியா," என்று சொல்லி, "ஹரே சீதாராம்!" என்று சொல்லிக் கொண்டே ஒரு கொட்டாவிவிட்டு, "நான் சொல்லுவதை நீர் மறுக்கமாட்டீர்களே!"

வி: "மறுக்கவேமாட்டேன்."

சே: "நான் சொல்லுகிறபடி நீர் நடந்தால் உமக்கு ஆயிரம்ரூபா தருகிறேன்."

வி: "நீங்களோ பெரியவர். நீர் சொல்லுவதை நான் கேளாமலுமிருப்பேனே."

"சரி, உமக்கும் இன்னம் கலியாணமாகவில்லை. எதிர் வீட்டில் ஒரு சரியான பெண் இருக்கிருள். வயதோ பதிஞன்கு உமக்கு சரியான ஜோடி. அப்பெண்ணின் புருஷன் அடியே (உள்ளே திரும்பி) வாசல் கதவை தாழ்ப்பாளிட்டுவை. உன்னைத்தாண்டி—வெங்கனூர் பையன் அப்பெண்ணுக்குத் தகுந்தவன் அல்லன். நீ தான் தகுந்தவன். இங்கேயே ஒரு கடிதம் அப்பெண்ணின் புருஷன் எழுதுவதுபோல் எழுதி கையெழுத்திட்டு—அவன் மாமனுர்—ஒரு பயல் இருக்கிருன்—உள்ளே இருப்பான் அவனிடம் கொண்டுபோய்க் கொடும். நேற்றையதினந்தான் மாப்பிள்ளைக்கு, ஹைதராபாத்தில் வேலை கிடைத்திருக்கிறதென்றும் மாப்பிள்ளைக்கு உடம்பு சௌகரியமில்லையென்றும் கடிதம் வந்திருக்கிறது. நான் சொல்லுகிறபடி எழுதிக்கொண்டுபோய்க்கொடும் "நான் மாப்பிள்ளை ரூமில் சேர்ந்துவசிப்பதாயும் என்னிடந்தான் அவன் அந்தரங்கமுள்ளவனென்றும் சொல்லும்" என்று சொல்லிக்கொடுத்தார். தீக்ஷதரும் மாப்பிள்ளையின் சொந்த ஊரையும், அவன் வீட்டு விருத்தாந்தத்தையும் சொல்லிக்கொடுத்து, நமது அய்யர் வீட்டு க்ஷேமசமாசாரங்களையும்தெரிவித்து "நீர் புறப்பட்டுச்செல்லும்பொழுது மூட்டை முதலானதுகளை நான் மறைவாகக்கொண்டு வந்து தருகிறேன்" என்று தீக்ஷதர் விநயமாகக் கூறினர். வழிப்போக்கன் சில துணிமணிகளையும் தன் சொந்தப் பணப்பையையும், தீக்ஷதர் எழுதிக் கொடுத்த கடிதத்தையும் எடுத்துக் கொண்டுவர இருவருமாக வெளியே வந்தார்கள். அச்சிறு அக்ரஹாரம் நிசப்தமாயிருந்ததுமன்றி, தெருவில் ஒருவரும் நடமாட்ட மில்லாதிருத்தலைக் கண்டதும், தீக்ஷதர், "ராமய்யரே சீக்கிரம் உள்ளே போய், கோபாலய்யரே என்று கூப்பிடும். பிறகு நான் சொன்னபடி நடந்துகொள்ளும்" என்று சொல்லி அனுப்பிவிட்டு, ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ராமய்யர் எதிர் வீடு சென்றதும், தீக்ஷதர் கதவைத் தாழ்ப்பாளிட்டுக் கொண்டு, உள்ளே புகுந்து "அடியே சீக்கிரம் இன்றை சாயந்திரத்துக்குள் ஒரு பெட்டி நிறைய முறுக்கு, தேன் குழல், லாடு, கரிச்சிக்காய், போளி, வடை முதலியவைகளில் வகைக்கு ஐம்பது வீதம் தயார் செய்து வை. பெண்ணைக்கூட்டிச் சென்ருல் இவைகளைக் கொடுத்தனுப்பி இதன் மூலமாய் இருவரும் இறந்துபோகட்டும்—காரியத்தை முடித்துவிடுவோம். உனக்கும் சம்மதந்தானேடி" என்று மெதுவாய்ச் சொல்ல, "அந்தக் குடித்தனம் நிர்மூலமாய்ப் போகட்டுமே. அதற்கென்ன தடை செய்து வைக்கிறேன்" என்று பதில் கூறினள். "அடியே சிமிழ் ஞாபகம் வைத்துக்கொள். மறந்து விடாதே" என்று சொல்லிவிட்டு பூஜையில் புண்யம் சம்பாதிக்க தீக்ஷதரும் உட்கார்ந்தார்.

அத்யாயம் 9.

"கோபாலய்யர் கோபாலய்யர், ஸார்" என்னும் குரல், உள்ளே வழக்கம்போல் கம்பமோரமாக தன் கைப்பெட்டியை வைத்துக்கொண்டிருந்த கோபாலய்யர் காதில் விழுந்தது. உடனே தன் தொந்தியைத் தூக்கிக்கொண்டு அய்யரும் வெளியேவந்து ஆஸாமியைக்கண்டு "நீர் யார், எந்த ஊர் ஸ்வாமி என்று கேட்டார். "அய்யருவாள், நமஸ்காரம். நான் ஹைதராபாத்திலிருந்து வருகிறேன். தங்கள் மாப்பிள்ளை ரெங்கஅய்யர் என்னை அனுப்பித்தார். அங்கே சம்மந்தியம்மாள் சௌக்கியம்." என்ருர் வழிப்போக்கரான ராமய்யரும். 'ரொம்ப சந்தோஷம் வாரும் உள்ளே" என்று சொல்லி வாய்மூடுவதற்குமுன், போக்கிரியும் உள்ளே நுழைந்து அய்யருடன் சமமாக உட்கார்ந்து, தான் கொண்டு வந்திருக்கிற கடிதத்தை நீட்டினுன். கடிதத்தை வாங்கிக்கொண்டு அய்யர் "அடியே,இங்கே வா. உன்மாப்பிள்ளைக் கடிதம் அனுப்பித்திருக்கிருர் என்று சொல்லிக் கடிதத்தைப் பிரித்துக் கொண்டே" தங்கள் பெயர் என்ன?

"என் பெயர் ராமய்யர்" என்று சொல்லி, அவர் கேட்ட கேள்விக்குத் தக்க உத்தரங்கள் கொடுத்துத் தனது உத்தியோகத்தையும் தெரிவித்து, தாங்களிருவரும் ஆத்ம நேசர்கள் என்றும், தங்களுக்குள் இருவரும் கலந்து யோசியாமல் ஒரு காரியத்தையும் செய்வதில்லை என்றும் சொன்னுன், நரசிங்கராயர் என்கிற ராமய்யர். அம்மாள் உள்ளேயிருந்து வந்ததும், கடிதத்தை வாசிக்கிறேன் கேள் என்று சொல்லி பின் வருமாறு வாசிக்கிருர்:-

உ

க்ஷேமம். நாஜர் ஜிங் தெரு,

ஹைதராபாத், ஏப்ரல்-மீ 1உ

மகா-ா-ா-ஸ்ரீ மாமா அவர்களுக்கு மாப்பிள்ளைரெங்கன் அநேக சாஷ்டாங்க நமஸ்காரம். க்ஷேமம் முந்திய கடிதத்திற்கு பதிலில்லை. எனக்கு உடம்பு அதிக ஜாட்டியமாயிருக்கிறது. பிழைப்பது அரிதுதான், ஆஸ்பத்திரியில் அவஸ்தைப்படுகிறேன். ஆகையால் இக்கடிதம் கொண்டுவரும் எனது ஆப்த நேசர் ராமய்யரிடம் தங்கள் பெண் சௌ. ராஜத்தைக் (சுவர்ணம்) கூட்டியனுப்ப வேண்டுகிறேன். தாமதிக்க வேண்டாம். அப்பா, அம்மாமுதலியோர் இவ்விடம் சௌக்கியம். தாங்களும், மாமியும் சீக்கிரம் நாலைந்து தினத்தில் புறப்பட்டுவரவும். உதவிக்குப் பெண்ணைக்கூட்டி மறு ரயிலில் அனுப்பிக்கவும். அவள் வந்தால் கொஞ்சம் மனம் சந்தோஷிக்கும். வேணும் நமஸ்காரம்.

ரெங்கன்.

"என்னடியிது! என்ன கஷ்டம்! (ராமய்யரைப் பார்த்து) இப்பொழுது என்னமாயிருக்கிறது."

இப்பொழுதா, ரொம்ப கஷ்டந்தான் உதவிக்குப் பெண் வந்தே தீரவேண்டும் அன்னபானம் ஒன்றும் கிடையாது." என்று சொன்னுர் ராமய்யர். வாயால் சில சங்கதிகள் கேட்டுக்கொண்ட பிறகு அவன் மீது அய்யருக்கு நம்பிக்கையும் பிறந்தது. இரவு 8 மணி மெயிலுக்கு அனுப்பிவிப்பதெனத் தீர்மானித்தார். குழந்தை ஸ்வர்ணத்துக்கோ தன் புருஷன் நிலைமையைக் கேட்டதும் மனவருத்தம் மேலிட்டது. எப்படியாவது தன் கணவனைக் கண்ணுல் பார்க்கப் பேரவாக்கொண்டனள். வந்தவன்மேல் அவளும் சிறிதும் சந்தேகங்கொள்ளவில்லை. அவனது பணிவான, கள்ளங்கபடமற்றப் பேச்சிலிருந்து அவன் மிக யோக்கியனென எல்லாரும் தீர்மானித்துவிட்டார்கள். வந்தவனும் பெண்ணைப் பல முறையும் பார்க்க நேரிட்டது. இவர்கள் புறப்படும் சங்கதியை தீக்ஷதர் அறிந்து தன் காரியத்தைச் சடிதியில் செய்து முடித்தார். பகல் போஜனம் ஒன்றரைமணி சுமாருக்கு முடிந்தது. பெண்ணைத்தான் ஒருவனே மணந்து கொண்டு சுகமனுபவிப்பதாகவே ஆகாசக்கோட்டை கட்டினுன். சுவர்ணத்தின் பாதாரவிந்தத்தில் ராமய்யர் மனம் பதிந்து கிடந்தது. பிரயாணத்தில் காலதாமதம் நேருமோவென்று ஏங்கினுன். அவனுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகக்கழிந்தது. சுவர்ணத்தினிடத்தே மனமுழுதையும் செலுத்தினுன்.

பகலும் கழிந்தது. வாயிலில் ஜட்கா வண்டியும் வந்து நின்றது. இரவு போஜனமும் மாலை 5 மணிக்கே முடிந்தது. ரயில் தப்பிவிடுமோ என்னும் சந்தேகத்தால் சுவர்ணம் தன் கைப்பெட்டியுடன் வண்டியில் முன் ஏறிக் கொண்டாள். பின்னர் ராமய்யர் உட்கார்ந்து கொண்டார். தீக்ஷிதர் வீட்டில் வைத்தபெட்டி முதலியவைகள் தன்னிடம் வந்துசேரும் என்பது அவனது நிச்சயமானதால், எதிர் வீட்டைப் பாராமலே உட்கார்ந்தான். பெண் தகப்பனும், தாயாரும் சுவர்ணத்திடத்தில் முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேசி, புத்தி மதி சொல்லி அனுப்பினார்கள். அய்யருடைய பொட்டிவண்டி யாதொரு ரிபேர் இன்றியும் பண்ணையாள் ஒருவனாவது வண்டியைப் பின் தொடராமலும் இருப்பதைப்பற்றியும், ராமனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. எதிர்வீட்டு தீக்ஷிதர் தன் வீட்டின் பின்புறமாக சில பெட்டிகளையும், மூட்டைகளையும் முன்னமேயே-வண்டி புறப்படுவதற்கு அரை மணிக்கு முன்-ரஸ்தாவின் கோணக்கரைப் பாலத்துக்குக் கொண்டுபோய்விட்டார். வண்டியும், தீக்ஷிதரைச் சந்தித்ததும், வழிப்போக்கர் பதில் கூறுது யாவற்றையும் வண்டியில் வைத்துக்கொண்டார். வண்டியும் வேகமாய்ப் புறப்பட்டது. மூட்டைகளையும், பெட்டிகளையும், தன் தோழி வீட்டுப் பகைவன் தீக்ஷிதர் வண்டியில் கொண்டுவந்து வைத்தபிறகு தீக்ஷிதர் கூறின உபசாரமொழிகளையும் சாமான்களைக் கொண்டுவந்து வண்டியில்வைத்த விதத்தையும் கண்டு பலவாறு சிந்திக்கலானள். சிந்திக்க, சிந்திக்க ராமன்மீது ராஜமென்னும் ஸ்வர்ணத்துக்கு சந்தேகம் ஏற்பட்டது. தீக்ஷிதர் கொடுத்த பையில் தாம் சொன்னது கையில் பாதிதான் கிடைத்ததென்றும் அதைப் பெற்றுக்கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டதிலிருந்து ஸ்வர்ணத்துக்கு அதைரியமும் அதிகரித்தது. தன்னை ஒருக்கால் கொன்றுவிடத்தான் தீக்ஷிதர் பிரயத்தனம் செய்துவிட்டாரோ வென்று அச்சமுற்றுள். வண்டியில் போகும்போது இருவரும் சம்பாஷித்தார்களா இல்லையா வென்ற சந்தேகத்தை வாசகர்கள் கொள்ளவேண்டுவதில்லை. ராமனது இன்பமொழிகளும், அடுக்குச் சொற்களும் ஸ்வர்ணமாகிய ராஜத்துக்கு கோபத்தை மேன்மேலும் மிகைப்படுத்தியது. வண்டியும் திருச்சி ஜங்கிஷனுக்கு வந்து சேர்ந்தது. கையில் பணம் அதிகம் இருந்ததால் ராமனும் ஹைதராபாத்துக்கே இவளை அழைத்துச் சென்று உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் சிகந்தராபாத்துக்கு இரண்டு டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு பெட்டிகளுடனும், சாமான்களுடனும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். குறித்த நேரத்தில் வண்டியும் புறப்பட்டுவிட்டது. வண்டி சிறிது தூரம் சென்றதும் ஸ்வர்ணம் அயர்ந்து நித்திரை புரிந்தாள். அவளைப் பார்த்தவண்ணமாக ராமன் சாய்ந்துகொண்டு பலவாறு சிந்திக்கலானன். தீக்ஷிதர் சொன்ன முறைப்படி நடந்து ரங்கனதபுரத்து கோபாலய்யரை ஏமாற்றிப் பெண்ணையும் அழைத்து வந்துவிட்டோம். நம்முடைய நிலைமையைச் சிறிதும் அவள் அறியக்கூடாவண்ணம் நாம் நடந்துகொள்ளவேண்டும். கையில் ரூ. 500 இருக்கிறது. சிகந்தராபாத்து சென்ற பிறகு பிறவற்றைக் கவனிப்போம்" என்று தன் மனதினுள்ளே எண்ணி அவளழகையே கண்ணுற்று ஆனந்தித்தான். (தொடரும்)

கல்கத்தா — டிரேட் மார்க் — ரிஜிஸ்டர்.

தங்களுடைய வியாபார டிரேட் மார்க்கையோ, வியாபார பெயரையோ அல்லது லேபில்கள் முதலியவைகளையோ, மற்ற வியாபாரிகள் உபயோகித்து தங்களுடைய வியாபாரத்தை கெடுத்து தங்கள் லாபத்தை அடையுமுன் உங்கள் டிரேட்மார்க்குகள், பெயர்கள், லேபில்கள் முதலியவைகளை குறைந்த சார்ஜில் உடனே **கல்கத்தா ரிஜிஸ்டர்** செய்துகொள்ளவும். ஒருமாதம் வரையில் சார்ஜுகள் மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. விபரநோட்டீஸ் இனும்.

விலாசம்:— **பிரின்ஸ் அண்டு கோ.,**
(கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்டர் அண்டு டிரேட்-மார்க் ஏஜெண்டுகள்)
18. பட்டாபிரும் பிள்ளை தெரு, திருச்சினப்பள்ளி. (1)

பால ஜோதிடம்

எதிர்கால பலாபலன்களைத் தெரிவித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்களினாலும், பத்திரிகைகளினாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். உண்மை அறிய ஒருமுறை ஆர்டர் செய்து பாருங்கள். ஹோராசாரம், சாராவளி, பாராசாரியம், சந்தான தீபம், பிருகஜ்ஜாதகம், மணிகண்ட கேரளம், சம்புநாத முதலிய சோதிட கிரந்தங்களை அனுசரித்துப் பலன்கள் எழுதப்படும். ஒரு வருஷ மாதவாரி பலன்கள் விரிவாக எழுத ரூ. 2. ஆருடம் கேள்வி 5-க்கு ரூ. 1. வாரப்பலன் ஒரு வருஷத்திற்கு ரூ. 5. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

பாலஜோதிட ஆபீஸ், 110. துரோபதை அம்மன் கோவில்வீதி, புதுச்சேரி.

அறிவிப்பு.

வர்த்தகம், கைத்தொழில் முதலானவைகளைப்பற்றி வியாசங்கள் பத்திராதிபருக்கு எழுதியனுப்பினல் பிரசுரிக்கப்படும். நல்ல வியாசங்களுக்கு தகுந்தாப்போல் சன்மானம் கொடுக்கப்படும். வர்த்தக ஊழியன் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படியாக எழுதியனுப்ப வேண்டும்.

PARIS PHOTOS.

The first of its kind among photos of real Paris Ladies in their secrets of life. Can be had at Pondicherry French India. A clear and vivid description will be out of place here, as all friends know. Order once and you will be immensely satisfied. Price Rs. 3. only per dozen. V. P. P. Extra. **M. Vadivelu Chettiar**
Eswarankoil St., PONDICHERRY.

Swadeshi Slates.

Best Swadeshi slates manufactured; Slatepencils, chalks, Buttons are supplied.

Apply to:— **V. V. Krishnamurthy,**
Sri Vivekananda Swadeshi Slate Works,
Markapur (M.S.M.Ry.)

WANTED

Capable agents of influence among merchants in all the important towns to canvass subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

Apply to:— The Manager,
Varthaga Oolian, Trichinopoly.

ஷராப் வர்த்தகம்.

ஈரோடு ஷராப் வர்த்தக சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில், ஈரோடு மஹாஜன உயர்தர கலாசாலை தலைமை ஆசிரியர் திரு. எஸ். மீனாக்ஷிசுந்தரமுதலியார் அக்கிராசனம் வகித்துப் பேசியதாவது:—

உங்கள் சங்கம் ஸ்தாபிதமாகி ஆண்டுகள் இரண்டேயாயினும் அது நன்கு நடைபெற்று வருவதைக்கண்டு மகிழ்ச்சி கொள்ளுகின்றேன். இவ்வூர் ஷராப் வியாபாரிகள் அனைவரும் இதில் அங்கத்தினராக இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. நீங்கள் பல மதஸ்தராகவும், பல ஜாதியினராகவுமிருந்தபோதிலும் ஒன்றுபட்டுச் சங்கத்தை சிறப்புடன் நடத்தி வருவது உங்களுக்குக் கௌரவத்தைக் கொடுக்கின்றது. மேல்நாடுகளில் இருப்பனபோன்று அவ்வளவு அதிகமான சங்கங்கள் நம்நாட்டில் இன்னும் ஏற்படவில்லை. ஏற்பட்டுள்ள சங்கங்களில் பல, சில வருடங்களிற் சங்கிவிடுகின்றன. உங்கள் சங்கத்தை ஊக்கத்தோடும் ஒற்றுமையோடும் நடத்தி நன்மையடைவீர்களென்று நினைக்கின்றேன்.

இத்தகைய சங்கங்களால் ஏற்படும் நன்மைகள் அளவிறந்தன. தனிப்பட்ட ஒருவர் அபிப்பிராயத்தைவிட ஒரு கூட்டத்தாரின் அபிப்பிராயத்திற்கு எப்பொழுதும் அதிக மதிப்புண்டு. உங்கள் வாத்தகத்தை நீங்கள் கட்டுப்பாடாய் நடத்த உங்கள் சங்கம் உதவி செய்யும். போட்டா போட்டியினால் பொதுவில் நஷ்டம் ஏற்படுவதை நீங்களறிவீர்கள். உங்களுடைய சங்கம் இப்படிப்பட்ட போட்டிக்கு இடந்தராது; அது கொள்முதல் விற்பனை விலைகளையும் ஒரு நிதானப்படுத்தும்.

வியாபாரிகளிற் சிலர், தங்கள் வியாபாரம் ஒன்றைமட்டும் கவனிக்கவேண்டுமேயொழிய மற்ற விஷயங்களைக் குறித்து கவனிக்க வேண்டியதில்லையெனக் கருதுகின்றனர் மனிதன் கேவலம் பொருளீட்டல் ஒன்றையே தனது வாழ்க்கைப்பயனாகக் கொள்ளுதல் சிறந்ததல்ல உலகத்தின் நாடி பணம் பணம் என்றடிப்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. பணம் இல்லாதவன் பிணம். இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்ததாயும் வேண்டாள் ஆகையால் பொருள் சம்பாதித்தலை நான் இழிவாகக் கூறுவதாகக் கருதவேண்டாம். அதுவும் வறுமைப்,பிணியால் வாடும் நம் நாட்டில் வர்த்தகமும் கைத்தொழிலும் அபிவிருத்தி யடைந்து செல்வம் பெருகினாலன்றி நம் மக்கள் சுகப்படமார்க்கமில்லை. ஆயினும் பொருளீட்டலோடு மானிட ஜென்மமெடுத்ததற்கு நாம் இதர விஷயங்களிலும் கவனம் செலுத்துதல் அவசியம்.

காலசக்கிரமானது வெகு வேகமாகச் சுழல்கின்றது. உலகத்தில் மாறுதல்கள் தினந்தினம் ஏற்படுகின்றது. உறங்கிக் கிடந்த மக்கள் விழிப்படைந்து வருகின்றனர் பிற்போக்கான நாடுகள் மிக விரைவில் முற்போக்கடைந்து வருகின்றன. ஆனால் நம் தாய்நாடோ பழம் பெருமை பாடிக்கொண்டே ஆமை போல் நகர்கின்றது “இந்தியாவில் சுயராஜ்யம் வேண்டுமென்று கூறுவோர் ஆங்கிலக் கல்விகற்ற ஒரு சில தேசியவாதிகளே. பொது ஜனங்கள் சுயராஜ்யத்தை விரும்புவதில்லை. நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் கல்வி வாசனை அற்றவர்களாகயிருக்கும் தேசத்திற்கு சுதந்தரமளிப்பது கேட்டையே விளைவிக்கும்” என்று ஆங்கிலேயர்களில் ஒரு சாரார் கூறுவதற்குக் காரணம், செல்வமும் மதிப்புமுடைய வியாபாரிகளில் அநேகர் ராஜீய, தேசீய, சமூக விஷயங்களில் அக்கரை யில்லாமல் இருத்தலேயாம். உங்கள் சங்கத்திற்கு நீங்கள் பத்திரிகைகள் புத்தகங்கள் வரவழைத்து படித்துப் பயன்பெறுவீர்களென்று நினைக்கின்றேன். மாதம் ஒரு முறை நீங்கள் அறிஞர்களைக்கொண்டு உபந்நியாசங்கள் நடத்துவித்து பற்பல விஷயங்களைச் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம். இக்காரியங்களுக்கு உங்கள் சங்கம் மிகவும் உதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கனவான்களே! உங்கள் ஷராப் வர்த்தகமானது மிகவும் புராதனமானது மக்கள் எந்தக்காலத்தில் ஆபரணங்களை விரும்பி யணிந்துவந்தார்களோ அந்தக் காலத்திலேயே அது தோன்றியிருக்க வேண்டும். உலகில் உள்ள எல்லா தேசத்தாரைக்காட்டிலும் விலையுயர்ந்ததும் அதிகமானதுமான நகைகள் அணிபவர்கள் இந்தியர்களே வறுமை நிறைந்த இக்காலத்திலேயே இப்படி யிருந்தால் செல்வம் பொங்கிச் செழிப்புற்றிருந்த பண்டைக்காலத்தில் எவ்வளவு நகைகள் நம் நாட்டில் அணியப்பட்டு வந்திருக்க வேண்டும். மரவுரிதரித்துக் காட்டுக்குச் சென்ற சீதை தன்னை ராவணன் தூக்கிக்கொண்டு போன காலத்தில் நகைகளை வழி நெடுக அடையாளத்திற்காகப் போட்டுக்கொண்டு போனாள் என்றால் சீதை எவ்வளவு நகை அணிந்திருக்க வேண்டும். கோவில்களிலும், அரசர்கள் மாளிகைகளிலும் குவியல் குவியலாக நகைகள் இப்பொழுதும் இருக்கின்றன. இவ்வளவு ஏராளமான நகைகளுக்கு அக்காலத்தில் தங்கம் எங்கே கிடைத்தது; எக்காரணத்தால் இந்தியா அவ்வளவு செழிப்படைந்திருந்தது. தற்சமயம் இருக்கும் நகைகளை உருக்கி கோடிக்கணக்கான ரூபாய்க்கு தங்கம் வாரம் வாரம்-மேல் நாட்டிற்குப் போகிறது போல் பண்டைக்காலத்தில் நம் நாட்டிலிருந்து தங்கம்வெளிநாட்டிற்குப் போகவில்லை. நம் நாட்டில் திபேத்து தென்னிந்தியா முதலிய இடங்களில் தங்கச் சுரங்கங்கள் பலவிருந்தன. சிந்து, காவேரி முதலிய நதிதீரங்களில் பொன் எடுத்து வந்ததாகச் சரித்திரத்திலிருந்து தெரியவருகின்றது.பொன்னை கொழிந்து வந்ததால் காவேரிக்குப் பொன்னி நதியெனப் பெயர் வழங்கப்பட்டது.

நிற்க இந்தியா தேசம் இதர நாடுகளோடு செய்துவந்த கடல் தரை வியாபாரங்களால் ஏராளமான தங்கத்தைப் பெற்றுவந்தது. இன்றைக்கும் சுமார் பத்தாயிரம் வருடங்கட்கு முன்பு தொடங்கி பாபிலோன், ஸிரியா, பாரசீகம், எகிப்து, கிரீஸ், ரோம், அரேபியா, சைனா முதலிய தேசங்களோடு வியாபாரம் செய்து வந்திருக்கின்றது. இந்தியர்கள் தங்கள் சொந்தக் கப்பலில் மேல்நாடுகளுக்குப் பட்டு, நூல், கம்பளி ஆடைகள் ஏராளமாக அனுப்பி வந்தனர். இவைபோக தந்தம், சந்தனக்கட்டை, தேக்கு, அரிசி, மிளகு, இஞ்சி, வாசனைத் திரவியங்கள், வெற்றிலை, நவரத்னங்கள், குரங்கு, மயில் இவைகளை ஏற்றுமதி செய்துவந்தனர். இவைகளை விற்று ஏராளமாக தங்கம் நம் நாட்டிற்குக் கொண்டுவந்தனர். தென்னாடே இவ்வியாபாரத்தில் தலை சிறந்து விளங்கியது. தொண்டி, முசிறி, காவிரிப்பூம் பட்டினம் முதலிய துறைமுகங்கள் தென்னாட்டில் பெயர்பெற்றிருந்தன. இன்றும் மதுரை ஜில்லாவிலும் கண்ணனூர் முதலிய இடங்களிலும் கிடைக்கும் ரோம அரசர்களின் தங்க நாணயங்களே இதற்குப் போதிய சான்றாகும்.

நமது மலையாளத்தின் தேக்கு மரங்கள் ‘உர்’ என்னும் பாபிலோன் தேச அரசனால் 5000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட மாளிகைகளில் காணப்

படுகின்றன. ஆறுயிரம் வருடங்கட்கு முன்பு இறந்துபோன எகிப்து தேசத் தரசர்களின் சரீரங்களில் இன்றும் இந்தியா தேசத்து மஸ்லின் காணப்படு கின்றது. அருலியன் என்னும் ரோமச் சக்கிரவர்த்தி காலத்தில் இந்தியாவி லிருந்து எற்றுமதி செய்யப்பட்ட பட்டுச் சரிகைக்குச் சரி எடை தங்கம் கொடுக்கப்பட்டது. ப்ளீனி என்னும் ரோம அறிஞர் அனேக ஆயிரம் வருடங் கட்குமுன்பு "இந்தியா தேசத்திலிருந்து வரும் வாசனைத் திரவியங்கட்கும் ஆடம்பர வாழ்க்கைக்கு வேண்டிய மற்ற வஸ்துக்களுக்கும் ரோமாபுரியிலிருந்து வருடாவருடம் எழாயிரம் பவுன் போகின்றதே" என்று, தற்காலம் நம் நாட்டுத் தங்க மெல்லாம் வெளிநாட்டிற் குப் போவதைக் கண்டு நாம் கண்கலங்கு வதுபோல் மிக்க வருத்தத்துடன் எழுதியிருக்கின்றுர். சிந்து மகாணத்தைக் கைப்பற்றி அரசாண்ட டரயஸ் என் னும் பாரசீக வேந்தன் அம்மாகாணத்தி லிருந்து வருடாவருடம் 12,90,000 மதிப்புள்ள தங்கம் கப்பம் வாங்கிவந் தான். இத் தங்கத்தின் அதிகப்பாகம் சிந்து நதிக்கரையில் கிடைத்தது.

மேற்காட்டியவைகளிலிருந்து எவ்வளவு தங்கம் நம் நாட்டில் அக்காலத் தில் இருந்திருக்க வேண்டுமென்பதை நீங்கள் ஒருவாறு ஊகித்துக்கொள்ள லாம். இத் தங்கத்தில் பெரும்பாகம் ஆபரணங்கள் செய்யப்பட்டன. விலை யுயர்ந்த நகைகள் ஏராளமாக வெளிநாடு களுக்கும் அனுப்பப்பட்டன. பாக்தாத் நகரத்திற் மிக்க புகழோடு அரசு நடாத்தி வந்த ஹருன்-அர்-ரஷிட் என்னும் சக்ர வர்த்தியும், மேற்கு ஐரோப்பாவை வெற்றிகொண்டு அரசாண்டு வந்த சார்ல் மேன் என்னும் அரசனும் நம் நாட்டு நகைகளின் வேலைப்பாட்டின் திற மையையும், விலையையும்கண்டு பிரமிப் படைந்ததாக சரித்திர வல்லார் கூறு கின்றனர். ரோமாபுரி மாதர்கள் இந் தியா தேசத்து நகைகளை விரும்பி அதிக விலை கொடுத்து வாங்கி யணிந்து வந்த னர்.

தங்கம் எவ்வளவு அதிகமாக நம் நாட்டிலிருந்ததோ அவ்வளவு அதிக மாக விலையுயர்ந்த நவரத்னங்களும் இங்கே கிடைத்தன நமது ராணியா ரின் கிரீடத்திலுள்ள மணிகளுக்கு ராணியாய் ஒப்புயர்வின்றித் திகழும் கோஹினூர் வைரம் நம் நாட்டதே. பிரஞ்சு தேசத்து நகை வியாபாரியான டெவானீயரால் திருடிக் கொண்டு போகப்பட்ட ராம்சிதா விக்ரஹத்தில் ஜ்வலித்துக்கொண்டிருந்த நீல ஒளி யுடைய விலைமதிக்கமுடியாத வைரமும் இந்நாட்டில் கிடைத்ததே. இந்திய அர சர்களுடைய ஆபரணங்களிலிருக்கும் நவரத்னங்களுக்கும் கோவில்களின் நகைகளிலுள்ள கற்களுக்கும் ஒரு கணக்குண்டோ. உலகத்தின் பல பாகத் திற்கும் இலங்கைக் கரையில் எடுக்கும் முத்துக்கள் பல்லாயிரக் கணக்கான வரு டங்களாக அனுப்பப்பட்டு வருகின்றது. கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள படியூரி லும், சேலம் ஜில்லாவிலுள்ள வாணியம் பாடியிலும் சுரங்கங்களிலிருந்து உல கின் பல பாகங்களுக்கு கோமேதகம் அனுப்பப்பட்டு வந்தது. அக்காலத்தில் கோமேதகம் உலகத்திலேயே இவ் விரண்டு இடங்களில்தான் கிடைத்த தாம். ரோமர்கள் இக் கற்களுக்கு ஏராள மான விலை கொடுத்து வாங்கி வந்தனர். இப்படித் தங்கமும் நவரத்னங்களும் கிடைத்ததால் நம் நாட்டில் நகைகள் கணக்கின்றிச் செய்யப்பட்டு விற்பனை யாகிவந்தன. இதிலிருந்து ஷராப் வியா பாரம் எவ்வளவு பழமையானதென்றும், எவ்வளவு உன்னதஸ்திதியில் அக்கா லத்திலிருந்ததென்றும் நன்கு புலனு கின்றது.

ஆனுல் தற்காலத்திலோ உங்கள் வர்த்தகம் மிகவும் க்ஷீணதசையில் இருக் கின்றது. அது எப்படிச் செழிப்படை யும்? வறுமையில் வாடும் நமது மக்கள் மனக்கஷ்டத்தால் உள்ள நகைகளையும் விற்றுவரும்போது புதிய நகைகள் செய்ய எவ்வாறு இயலும். பழைய நகை களை நீங்கள் வாங்குவதால் உங்களுக்கு ஏதாவது லாபம் கிடைத்தால் கிடைக்க லாமேயொழிய புதிய நகைகள் செய்து விற்பதால் அதிகலாபம் உங்களுக்கு இப்பொழுது கிடைக்காதென்று நினைக் கின்றேன். உண்டியும் உடையும் கிடைத்த பின்னரன்றே மக்கள் அணி கள் செய்யமுற்படுவர். உண்டிக்கும் உடைக்குமே நம் மக்கள் தத்தளிக்கும் போது ஆபரணங்கள் செய்ய அவர்க ளால் எவ்வாறுகூடும். உங்கள் வர்த்த கம் விர்த்தியடைய வேண்டுமெனில் நம் நாட்டின் செல்வம் நமது நாட்டிலேயே தங்கவேண்டும். கைத்தொழிலாலும் வர்த்தகத்தாலும் நம் நாடு செழிப்படைய வேண்டும். அத்தகைய காலம் சமீபத் திலிருக்கின்றதென்றே நம்புகின்றேன்.

உங்களுடைய வியாபாரத்தால் நீங் கள் மட்டுமன்றி அநேக தங்கம், பொன், வெள்ளி நகைகள் செய்யும் தொழிலாளி கட்கும் வேலை கிடைக்கின்றது. அவர் களுக்கு நீங்கள் கொடுக்கும் கூலி குறைந்ததோ சரியானதோ நான் அறி யேன். அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கஷ்டமின்றி நடத்தப் போதியபடி கூலி கொடுப்பீர்களாக. இன்று உலகில் முத லாளிகள் ஆதிக்கம் வலுத்திருக்கின்றது. கூடிய சீக்கிரம் தொழிலாளர்கள் ஆதிக் கம் வரலாம் ஆகையால் தொழிலாளர் களை சரியாக கவனியுங்கள். உங்களுக் குள் ஒற்றுமை இருக்கும் வரையில் சங் கம் நன்றாக நடைபெறும் என்பதில் சந் தேகமில்லை.

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வு, நம் மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு நன்றிது தெரிந்திடல் வேண் டும்" என்ற வாக்கியத்தைஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

மதனுகமம்.

(புதுச்சேரி பதிப்பு.)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத் துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச்சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின் றன. இன்ப ரகசியங்களை தெளிவாக வும், விரிவாகவும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சு இந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூருமலே நண் பர்கள் அறிவார்களாகையால், இதிலுள்ள விஷயங்களை கூறுது விடுத்தனம். விலை ரூ. 1.

வஸந்த நிலையம்,

தர்மராஜா கோவில் வீதி, புதுச்சேரி.

எதிர்கால ஜோதிடம்

பலன் சரியில்லாவிடில்

பணம் வாபீஸ்.

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 2. வாராவாரம் நடக்கும் பலன் எழுத ரூ. 4. துவாதச பாவங் களுக்கு பலன் எழுத ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்கு ரூ. 1. ஆயுள்வரை பலன் எழுத ரூ. 25. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,

வைத்திகுப்பம்.

முத்தியாலுபேட்டை P.O. புதுச்சேரி.

சிலோனில் ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக் குள்ள ஏஜண்டுகள் சிலோனில் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர் "வர்த்தக ஊழியன்"

திருச்சிளுப்பள்ளி.

M. SULTAN ABDUL KADER.,

Sultania Medical Hall, Porto-Novo. S. A. District, India.

இதனை வாசிக்கும் புத்திமான்களுக்கும் பக்திவான்களுக்கும் ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை 1-வேளை லேகியம் சாப்பிட்ட 1-மணிநேரத்தில்கொடுக்கும்

கவனியுங்கள் ! **கவனியுங்கள் !!**

பர்மா கவர்னரின் டாக்டர் சர்டிபிகேட்.

நான் இரங்கூன் பஞ்சசக்தி கம்பெனியிலிருந்து பரங்கிப்பேட்டை சுல்தானியாவைத்தியசாலை சொந்தக்காரரால் செய்யப்பட்ட சிட்டுக்குருவி சத்தின் லேகியம் வரப்பெற்று அருந்திப்பார்த்தேன். அது தேகவலுவையும் வீரிய விர்த்தியையும் தாது புஷ்டியையும் கொடுக்கிறது. இன்னும் இந்தலேகியத்தில் அனேக குணங்களிருக்கின்றன.

டாக்டர் சையத்மேஜர் அலிகான் சாகிபு,
கவர்னர் மாளிகை, பர்மா. 20—12—1924.

கொழும்பு போலீஸ் மாஜிஸ்டிரேட் மகாகனம் பொருந்திய H. P. கப்மான்ஸ் அவர்களால் 6-12-1927ல் 864 நெ. ரிபோர்ட்டு. விலோன் கவர்ன்மெண்டு அன்லிஸ்ட் (மருந்து பரிசோதக அதிகாரி) மகாகனம் பொருந்திய C. T. ஸைமன்ஸ் அவர்களுக்கு அனுப்பி 13—12—1927ல் பரிசோதனை செய்தது. ரிபோர்ட்டு நெ. 880, 13—12—1927.

மெடல்பெற்ற சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும் பெருமையும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழுவார்கள். இச்சிறந்த அபூர்வ லேகியத்தை உபயோகித்தால் உற்சாகமடைவீர்கள் பண்டைகாலத்தரசர்கள் தத்துவங் குறையாது வாழ்ந்திருந்தார்களென அரபி பார்சி கதைகளிலும் தமிழ் புராணங்களிலும் வாசித்திருக்கிறோமல்லவா? அத்தகைய குணத்தை தரக்கூடிய அற்புத சஞ்சீவிகளில் இந்த சிட்டுக்குருவி சத்தின் லேகியமும் ஒன்றென்பதை அனுபவத்தால் அறிந்து கொள்வீர்கள். இது எங்கள் முன்னோரின் ஏட்டுப்பிரதியிலுள்ள அனுபவ முறை.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும், அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, எட்டுவித மிஸ்ரிகள், பத்துவகை விதைகள், எழுவகை மூலிகை, சூரணங்கள் ஐந்துவேர் வகைகள், மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவு குறையாதபடி பாகஞ்செய்து வாலையந்திரத்திலிறக்கிய சிட்டுக்குருவி சத்தும் சேர்த்துப் பாகமாய்ச் செய்யப்பெற்றது.

இந்த சிட்டுக்குருவியின் குணத்தைப்பற்றி சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் சித்து புருஷரின் உத்தம வாக்கியமும் எற்பட்டிருக்கிறது. ஆகவே, பலகாலும் பலபேருக்கும் கொடுத்து யாம்கண்ட உபயோகத்தையும் சொல்கின்றோம்.

லேகியத்தின் குணமாவன.

வாதபித்த சிலேத்ம மிகுதிக்குறைவால் எற்படும் இரத்தக் குறைவு, எழுவகைத் தாதுக்களின் பலஹீனம் அஸ்திவெட்டைச்சூடு, வீரிய நஷ்டம், சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு கிருமிரோகம், துர்நீர்வியாதிகள், தேகத்தில் ஓடித்திரியும் பலவகை வாய்வுரோகம், பார்சவாய்வு நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி, மறதி, மனோசக்தி நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விர்த்திசெய்து புத்திசாதுர்யத்தைக் கொடுத்து தேகத்திற்கு நல்ல பலத்தை உண்டாக்கும். இந்த லேகியத்தை பால்யர் முதல் வயோதிகர் வரையில் சாப்பிட்டால் தேகத்திற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். இதை ஒருதரம் பரீக்ஷை செய்து பார்க்கவும்.

40-நாள் சாப்பிடும் 16-பலம் டப்பி விலை ரூ. 12-0-0. 20-நாள் சாப்பிடும் 8-பலம் டப்பி விலை ரூ. 6-8-0. 12-நாள் பரீக்ஷை செய்ய 5-பலம் டப்பி விலை ரூ. 3-8-0. 8-நாள் 16-வேளை 2-பலம் டப்பி 1-க்கு ரூ. 1—4—0. 4-நாள் 8-வேளை 1-பலம் டப்பி 1-க்கு ரூ. 0—12—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரு முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூ. 2—0—0யும் சேர்ந்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷியூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும்.

☞ எமது விலாசம் :—

எம். சுல்தான் அப்துல் காதிர்
சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா, இந்தியா.

☞ சிலோனுக்கு ஸோல் ஏஜண்டு :—

☞ **S. E. காதர் முகையதீன்,**
நெ. 39 கிழங்கு கடைத்தெருவு,
கொழும்பு.

GOLD STANDARD.

While the immediate effects of the American crisis on the various markets are unquestionably important, a far more serious question is the fate of the gold standard in the future Hitherto in all discussions about international monetary reconstruction it has been tacitly assumed that France and the U. S. A. would be adherents to the gold standard that a number of small countries would regard it as a burnt child would regard a fire and that Great Britain would shoulder the responsibility of procuring from the world generally and France and U. S. A. in particular the necessary assurances regarding the observance of the rules of the gold standard game. This assumption served to invest the recent statements of Mr. Neville Chamberlain and Mr. Hoover with a profound interest. The former strengthened the hope that Great Britain would do her best in the cause of the gold standard, without allowing one or two countries to derive any undue advantage from the world's interest in it. The latter raised the fear that in her anxiety to deprive Britain of the advantage of a low sterling America, too, might tread the easy path of currency depreciation, thus accentuating the chaos of currencies and the difficulties of establishing a sound international standard.

Now that the devaluation of the dollar has come about, the only great nation to remain on the gold standard is France. And the other adherents are Holland, Switzerland, Italy and Germany. The last two are only nominally on the gold standard inasmuch as the exchanges in those countries are subject to the severest restrictions. In these circumstances, one has to ask himself whether the character of the gold standard problem as it was conceived by the Preparatory committee to the World Economic Conference, remains unchanged by America's defections. To the Gold Delegation, the problem was one of economising the monetary use of the available stocks of the metal. It foresaw a period of dwindling production, both absolutely and relatively to the growing demands of the world. And its recommendation was for the adoption of a lower ratio of gold to circulation. The recommendations had become obsolete even before their formal publication. For the problem had by then changed from one of shortage to one of maldistribution. The Preparatory Committee was alive to the change; and it viewed its task as one of correcting or nullifying the force which brought about that maladjustment. Amongst those forces war debts and reparations and tariffs and trade barriers had all their due place. The first two created the surplus out of which grew the hoards of France and America. And the second rendered inoperative such natural correctives to that maladjustment, as rise in prices, increased imports and eventual outflow of gold from the countries with a surplus.

DE-LINKING AND DEVALUATION.

The restoration of the international gold standard was therefore, dependent on a settlement of reparations and war debts and an understanding as regards tariffs and trade barriers. There can be no doubt that in the long run the advanced industrial nations will benefit equally from such a settlement. But the worst feature of the depression is that some of its effects have assumed an importance even greater than the larger question of world revival. How to carry on till the revival is a problem which, living as we do in the present, we can never shirk. If there have been an abandonment of the gold standard and a devaluation of the national currency and if they are followed by certain beneficial effects it is naturally a question by itself on what terms and for what consideration can the country consent to forego those benefits. Likewise those countries which continue to adhere to the gold standard cost covetous eyes on the advantages of de linking and devaluation.

Prof. Cassel saw this tendency nearly a year ago and in his Rhodes lectures he observed: "Now a days it is quite a general view that it would be an advantage to go off the gold standard in order to come back to it again at a new parity below the internal purchasing power of the currency. Countries of the gold Standard are very eager to depress the external value of their currencies below the internal value. The huge sum of £150,000,000 which the British Government now wants to have at its disposal for the regulation of the external value of the pound is in many quarters, and especially from the side of the producers, expected to be used for a deliberate depression of the external value of the pound below its internal value and for giving thereby a particular advantage to British pro-

duction Such tendencies constitute, of course, the very negation not only of the gold standard but generally of any international standard. The great popularity which they undoubtedly enjoy is only a proof of how completely the classical idea of the gold standard has been undermined."

RACE FOR LOWER EXCHANGE.

Such conditions are actually ruling to-day. Though America is not yet formally off the Gold standard, and though such abandonment, when it comes about, may not be purely out of choice there is no doubt there has been a race for lower exchange.

Just as Britain was followed by a number of independent nations, not to speak of the Empire countries in the course she took in September 1932 America also might be followed by others. In this the advantages of a devaluated currency might well be the prime motive. If that happens, France might be left alone to bear like Atlas. the weight of the world's gold standard: and she too, might repudiate that obligation.

The result would not be an unmixed evil. As no debts could possibly have been contracted in terms of gold ounces or gold bars, the devaluation of every currency in the world would mean a substantial lightening of the load of individual, national and international indebtedness. But only if each country would use its freedom from the gold standard to carry out an expansionist policy. The present craze for low exchange is conducive to such expansion.

If the internal monetary conditons continue on the lines with which we have become familiar during the last one year and a half, the result would be that each country would be following a policy similar to the currency and exchange policy of Great Britain since 1931.

For a time gold would cease to be the common denominator in terms of which the value of every currency could directly or indirectly be arrived at. There would be no definite external value of a currency, but only the relative value of every two currencies based on the balance of transactions between the two countries. One would have to look in vain for a working index of the value of gold in terms either of national currencies or in terms of goods. But if during this period each nation were to attempt to provide in its own way for a gold reserve which would be needed in the event of an ultimate return to gold the value of gold would be maintained. With a general expansionist movement on foot in all countries and the burden of debts lightened by a rise in prices, and with a keener appreciation of the dangers of international monetary chaos, conditions would be more favourable for a return to gold. For at present, or rather a fortnight ago the world have to take the gold standard as the generous boon of the U. S. A. or Great Britain. In the conditions which have been envisaged in this paragraph the establishment of the gold standard and an agreement as to lower reserve ratio could be more easily achieved.

APPOINTMENT OF MARKETS.

Such monetary agreement can cover only the question of unfair competition through depreciated currencies. But agreement about tariffs which, all authorities are agreed, is the essential basis of a smooth working of any international standard would present difficulties of its own especially as we are passing through a period of radical redistribution of the world's industries. In fact, we have of late inclined to the view that the world's problem at present is one of apportionment of markets rather than imperfections of the international standard. In our comments last week on the American situation we referred in brief to this question. Competition for markets was at the basis of the wars of armaments. With the exhaustion of nations and the growth of a more pacific sentiment, it changed to a war of tariffs. The latest phase is the utilisation of a depreciated currency. If the monetary system of the world is to function properly there must be at least a tacit understanding as to the lines on which the national economy of each nation can develop.

Such an understanding is more difficult to arrive at than even the understanding over the rules of the gold standard game. The conditions of universal abandonment of the gold standard in its historic form which we assumed in an earlier part of this article are purely speculative. Such speculation apart it is not unreasonable to suppose that before long America will have struck a line of her own in her attempts to solve the internal troubles. In spite of the paucity of news from abroad, it is now learned that President Roosevelt has in cousulation with Congress leaders decided on "managed currency expansion." The measures necessary to meet the present emergency may be

easily guessed even in the absence of definite reports which are now happily available. The moratorium would be certainly extended to as long as may be necessary, It is quite possible that hoarders of gold may be compelled to return the gold, by penal measures suited to the conditions in that country. And in the meanwhile the expanded currency would be put into circulation.

The total gold in the United States is estimated to be 4,250, million dollars, of which over 1,000 million is in circulation About 3,000 million is thus available for the Government as backing to present and future paper money. The Federal Reserve notes require 40 per cent. gold backing. Even under the existing law the note issue could be expanded by nearly 3,000 million dollars on the present backing of gold securities. The new issue which is to be known as Federal Reserve bank notes as distinct from the Federal Reserve notes mentioned before would be backed by Government Bonds on the same basis as Treasury notes. The aim would be to replace in large part the 7,250 million dollars now in circulation which is being hoarded.

In the messages so far received, there is no indication of the exchange policy of the authorities in America; but it may be supposed that an appreciable devaluation would be found inevitable. Whether or not America would be able to ad-here to the gold standard with a lower parity is more than what even the authorities, it seems can say at present. The situation in America probably continues grave and the success of the relief measures is still uncertain. But there can be no doubt that the restoration of order is only a question of time and that once order is restored, America would find it possible to preserve some link with gold.

NET RESULT OF U.S. CRISIS.

It is, therefore, not quite speculative to estimate the net results of the American crisis. At present what holds the world's attention is the accentuation of the chaos in the world's economy and finance. But with the restoration of order it will be recognised that there is a substantial balance of good in this apparent evil. In America, it will have enabled the authorities to recognise and face that unsoundness in the banking and credit position, which they have all along attempted for political as well as economic reasons, to shirk through, make-shifts of various kinds. It will have provided the occasion for giving the first check to the hoarding tendency which is fraught with the gravest consequences, alike to America and the rest of the world. Only in crisis like the present would it be possible to reverse the Himalayan follies of the Federal Farm Board. American opinion and attitude to world problems of reconstruction will be less insular and more in touch with the and the American viewpoints would be bridged to a large extent; and an international consensus of opinion in regard to outstanding economic questions will soon arise. Incidentally, the price of silver has been given a fillip, and there are prospects of silver finding a better monetary demand in the future.

These changes have a vital bearing on the future of the gold standard. After the Lausanne Settlement of reparations, France cannot be coupled with the United States as a stumbling block in the re-establishment of the gold standard. And if, as a result of the crisis, opinion in the U.S.A. should become more favourable, is there not cause for gratification? There is every reasonable hope that Mr. Roosevelt will find in easier to carry out his promise of lower tariffs now than if the crisis had not occurred almost exactly at the time of his installation in the White House. If America consents to abandon her high tariff policy, it would, no doubt, ease the position considerably; but it would be wrong to suppose that the conditions of free trade, which are supposed by Prof. Cassel and others to be an essential condition of the smooth working of the gold standard, would be ensured. Free trade must and will be put off till the present process of re-distribution of industries is well advanced. But the most urgent need is to set the wheels of world trade moving again; and the American crisis might well serve to bring us nearer to it.—(Indian Finance.)

INFRINGEMENT OF TRADE MARK.

His Honour Mr. Antony, Sub-Magistrate, Trichinopoly, convicted one Muhamad Gudumian, Cigar Merchant Trichinopoly, for infringement of Trade marks under section 482 I. P. C. and sentenced him to pay a fine of Rs. 50, or in default to undergo simple imprisonment for one month.

The facts of the case are: One Sulaiman Rowther, Cigar merchant, Trichinopoly was doing cigar business under the registered trade mark of "Crown Elephant" or "Yanamudi" (Tamil). The accused

ரயில்வே பகுதி

ரயில்வேக்களில் போதுமான வருமானமில்லையென்று மைலுக்கு $3\frac{1}{2}$ பென்சு வீதம் வசூல் செய்ததை மைலுக்கு ஒரு பென்னி வீதம் வசூல் செய்யலாமாவென்று இங்கிலாந்து ரயில்வே கம்பெனிக்காரர்கள் யோசித்து வருகின்றார்களாம்.

---

later started a cigar business with a similar trade mark "Crown Elephant" or "Kireedayanai" (Tamil). The accused submitted to the Registrar of Assurances for the Registration of his trade mark, a bigger design than the one actually used on the cigars. Evidence recorded further showed that the actual application for such registration was made only after the complainant had sent a notice to the accused objecting to the use of the trade mark. The trade mark of the accused was registered only after the complainant had instituted proceedings against him.

His Honour after reviewing the evidence held that the trade mark of the accused was beyond doubt a colourable imitation of the trade mark of the complainant and observed that the dealers themselves were unable to distinguish one from the other without close scrutiny. In the circumstances, he held the accused guilty.

பட்டுத் தொழில்

(Silk Industry)

வரி போர்டார் முன்பு பங்களூர், கைத்தொழில் டைரக்டரான திரு. ராமராவ் விசாரிக்கப் பட்டபோது, அவர் கூறியதாவது:—

"மைசூரில் மிகச் சிறந்த பட்டைத் தரக்கூடிய பட்டுப்பூச்சி வர்க்கம் வெகு காலமாக இருந்து வருகின்றது. பட்டுக் கைத்தொழிலானது இத்தேசத்தில் சுமார் ஒரு நூற்றாண்டாக இருந்து வருகின்றது. இதுவே இங்குள்ள குடிசைக் கைத்தொழில்களில் மிகவும் சிறந்தது. விவசாயிகளின் விவசாயக் கைத்தொழிலைப் போதிக்காமல் சுமார் 2 லக்ஷம் குடும்பங்களுக்குச் சாதாரணமாக இக்குடிசை கைத்தொழில் ஜீவனோபாயமாக இருக்கின்றது. இந்தியப் பட்டுக் கைத்தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்காததன் பயனாக; அமெரிக்காவில் ஜப்பானின் போட்டியை எதிர்த்து நிற்க முடியாத சீனா, இந்தியாவில் தன் பட்டுச் சரக்குகளை நஷ்டமும் கருதாமல் மீதமிஞ்சி இறக்குமதி செய்து விட்டது. ஆகவே 1931 முதல் இந்தியாவானது இத்தொழிலில் கொஞ்சம் கொஞ்சமாகப் பலவீனப்பட்டு வந்திருக்கின்றது.

கேள்வி:—தற்சமயம் இக் கைத்தொழிலில் ஏற்பட்டிருக்கும் குறைவு நிரந்தரமானதென்று நீங்கள் கருதுகின்றீர்களா? அல்லது இது தற்காலிகமானதென்பதே உங்கள் அபிப்பிராயமா??

விடை:—"இக்காரணங்கள் நிரந்தரமானவைகளல்ல: ஆயினும் இவை தற்சமயமுள்ள நிலையில் மிகவும் கடுமையானவைகளாயிருப்பதனால் பாது காப்பு முறைகளை இப்போது அனுஷடிக்காவிட்டால் கூடிய சீக்கிரத்தில் இத்தொழில் மிகவும் பிரதிகூலமாகப் பாதிக்கப்பட்டு விடும்.

கேள்வி:—"முடிவில் பாதுகாப்பின்றியே இத்தொழில் உலகப் போட்டியை எதிர்த்து நிற்க முடியுமாமென்று நீங்கள் அபிப்பிராயப்படுகின்றீர்களா?"

விடை:—"ஆம், தற்சமயம் உடனே போதுமான பாதுகாப்பு அளித்தால் இன்னும் 15 வருஷங்களில் இக்கைத்தொழிலில் மிகவும் அபிவிருத்தியுறும். அப்போது இது எத்தகைக் அந்நியப் போட்டியையும் எதிர்த்துப் நிற்கக் கூடும்."

கே:—"நீங்கள் கூறக்கூடிய ஆலோசனை என்ன?

வி:—"இறக்குமதியாகும் பொருள்களின் விலை மதிப்பின்மீது 100-க்கு 100-வீதம் வரிவிதிக்கவேண்டும் என்று நான் ஆலோசனைகூற விரும்புகிறேன்."

கே:—"இதனால் என்ன பயன் நேருமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்."

வி:—"நன்றாகப் பாதுகாப்பு வரி விதிப்பதானது பட்டுத் துணி வகைகளின் விலைவாசிகளையுயர்த்தும், அதனால் நயவிலைக்கு அன்னியப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டதனால் விஸ்தரித்தவியாபாரத்தில் ஜனங்கள் பட்டுத் துணிகளை வாங்குவதற்குக் கொண்ட ஆர்வமானது; இப்போது குறையும். ஆனால் இதனால் எவ்வித கஷ்டமும் நேரிடாது. ஏனெனில் சுருங்கிப்போன மார்க்கெட்டானது எப்போதும் ஒரே நிலவரமுடையதாயிருக்கும்."

கே:—"ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இக்கைத்தொழிலைக் காப்பாற்றுவதனால் பட்டு உற்பத்தியின் விலையில் குறைவேற்படுமென்று நீங்கள் கருதுகின்றீர்களா."

வி:—"ஆம்; பட்டு உற்பத்தியின் விலையில் 40 சத விதம் குறையுமென நான் கருதுகிறேன்.

R. T. P. M. சாமிநாத செட்டியார்,
46 நடுத்தெருவு, ஜெயன்கொண்ட சோளபுரம், (திருச்சிஜில்லா.)
சுதேசி ஜவுளிகள், நூல், ஜரிகை தினுசுகள் விலைசரசமாய்
எங்களிடம் கிடைக்கும்.

நாங்கள், சுதேசி ஜவுளிகள் உற்பத்தி செய்கின்றோம்.

இந்தியா கவர்ன்மெண்ட் போஸ்டாபீஸ்

= காஷ் =

ஸர்ட்டிபிகேட்டுகள்.

ரூ. 8-க்கு ரூ. 10, 5-வருஷத்தில் கிடைக்கும்.

வருமான வரியின்றி

100-க்கு $4\frac{1}{2}$ விகிதம். வட்டிக்கு வட்டி தரும்.

தேவையானுல் ஒரு வருஷத்திற்குப் பிறகு வட்டி
யுடன் ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஒருவர் ரூபா 10,000-வரைக்கும்

ஸர்ட்டிபிகேட்டுகள் பெறலாம்.

காஷ் ஸர்ட்டிபிகேட்

எடுத்துக்கொள்ள, பிரதி மாதமும் ஒரு தொகையை
மிச்சப்படுத்தி தனியாக வையுங்கள்.

1933 ஹூ ஜனவரி மாதம் 3-ந் தேதியன்றோ அதற்குப்பிறகோ இப்பொழு
வட்டிவிகிதம் மாற்றப்படக்கூடியதற்கு முந்தி 5-வருஷகாலம் முடிந்து ரொக்கத்தை
றுக். கொள்ளத் தகுதியடையக்கூடிய ரொக்க ஸர்டிபிகேட்டுகளை உடையவர்கள்
படின், மறுபடியும் ஐந்து வருஷகாலம், வட்டிக்கு அத்தொகைகளைப் போட்டு
லாம். ரூ 10-மதிப்புள்ள அவ்வகை காஷ் சர்டிபிகேட்டுக்கு பூர்த்தியான
ற்கும், $1\frac{3}{4}$ அணு வீதம் முதல் 2 வருஷத்தில் வட்டி கிடைக்கும்.
ருஷத்திற்கும் பூர்த்தியான ஒவ்வொரு 3-மாதத்திற்கும் 2 அ
இதன்னியில் 5 வருஷ முடிவில் 2 அணு அதிகப்படி வட்

போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் தமது க
டிபிகேட்டுகள் வாங்க விரும்பும் சேவிங்ஸ் பா
ணத்தை வாங்கி மீண்டும் தபாலாபீஸில்
ான தமது விண்ணப்பத்துடன் பா
வதற்கான விண்ணப்பத்தில்

தபாலாபீ

வி

திருவாங்கூர் நேஷனல் பாங்கு

லிமிடெட்.

(1912-ஆம் திருவாங்கூரில் இணைக்கப்பட்டது.)

ரிஜிஸ்தர் ஆபீஸ்:-திருவல்லா.

தலைமை ஆபீஸ்:-ஆலப்பிழை.

பிராஞ்சு ஆபீஸ்கள் :—

மதராஸ், மதுரை, திருச்சிறாப்பள்ளி, உதகமண்டலம், கள்ளிகோட்டை, உடுமல்பேட்டை, திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், எர்ணாகுளம், கொச்சி, திருப்பணித்துறை, தேவிகுளம், மூணார், திருச்சூர், திருப்பூர், விருதுநகர், பம்பாய்.

18—1—1933ல்	செலுத்தப்பட்ட மூலதனம்	ரூபாய்	4,22,050—1—4.
,,	காப்பு திரவியம்	,,	2,00,000—0—0.
	கவர்ன்மெண்டு பாண்டிலும், நெடுந்தவணை டிப்பாசிட்டாகவும், இதரபாங்குகளில்போடப்பட்டிருக்கும் தொகையும், கையிருப்பும்	,,	9,79,166—6—4.
,,	மொத்த விபாபார மூலதனம்	,,	61,73,816-10—7.

3-நெ. மாதாந்திர ஏலச்சீட்டு.

எ.	வகுப்பு மாதம் 1-க்கு	ரூபாய்	40	வீதம் 25 மாதத்திற்கு	முதல்	ரூபாய்	1000.
பி.	,,	,,	20	,,		,,	500.
ஸி.	,,	,,	10	,,		,,	250.
டி.	,,	,,	5	,,		,,	125.

…லத்தில் சேர்ந்திருப்பவர்களுக்கு விதிகளின்படி டிவிடெண்டு கொடுக்கப்படும்.
…டு 1933-வருஷம் மே-மாதம் 5-தேதி வெள்ளிக்கிழமை எடுக்கப்படும்.

…சேருபவர்களை இப்பொழுது முதலே சேர்க்கப்படுகிறது. 1933-ஆம்
…சேர்ந்துவிட வேண்டும். அதற்குப்பின் சேர்த்துக் கொள்ளப்பட…

…விபரங்களும், மனு பாரங்களும் திருச்சி கிளைபாங்கியில் …

…ட்டின்பேரில் குறைந்த வட்டிக்கு பணம் கொ…
…களின்பேரில் வட்டிக்கு கடன் கொடுக்கப்ப…
…00-க்குமேல் 8 % ரூ. 20-க்குமேல் 9…

…கே. ஜே. நைனன்,